நம் வழி வேளாண்மை

பருவம் 28 ஜூலை – செப்டம்பர் 2018 இதழ் 2

புதுதில்லி ராஷ்ட்ரபதி பவனில் சாதாரண மக்களின் கண்டுபிடிப்புகளை சிறப்பிக்கும் பரிசு வழங்கும் திருவிழா நாள் :19–23 மார்ச் 2018

இயற்கை வழி விவசாயிகள், மூலிகை வைத்தியர்கள் மற்றும் அடித்தள கண்டுபிடிப்பாளர்களின் குரலோசை

நம் வழி வேளாண்மை

பருவம் 28 ஜூலை – செப்டம்பர் 2018 இதழ் 2

ஆசிரியர்
பெ. விவேகானந்தன்

நம் வழி வேளாண்மை தத்துவம்

தேனீக்கள் மலரை நாடிச் செல்கின்றன. மலருக்கு மலர் தாவி தேனை எடுக்கின்றன. தேனை எடுப்பதால் மலர் குறைபடுவதில்லை. மாறாக மலர் கருவுற்று காயாக, கனியாக துணை செய்கின்றன. தேனீக்களின் இந்த சேவையினால் மலரும் பயன் பெறுகின்றது. தனக்கும் பிறருக்கும் பயன்படும் தேனையும் சேகரித்து வைக்கின்றது. இந்த சேவை தத்துவத்தை பின்பற்றி நம்வழி வேளாண்மை ஒரு சிலரிடம் உள்ள உத்திகளையும் மற்றும் ஒரு பகுதியில் உள்ள பாரம்பரிய அறிவையும் எடுத்து வெளிக்கொணர்ந்து மற்றவர்களுக்கும் பிற பகுதிகளுக்கும் அறிமுகப்படுத்தி மேலும் பலரும் பயன் பெற வழி வகுக்கின்றது.

நம்வழி வேளாண்மை குழுமம்
பிற மொழி இதழ்கள்

ஆங்கிலம் – தேனீ (Honey Bee)
குஜராத்தி – லோக் சர்வானி
ஹிந்தி – சூஜ் புஜ் ஆஸ் பாஸ்கி
ஒரியா – அமா அகாபகா
தெலுங்கு – பல்லி ஸ்ருஜானா
கன்னடம் – ஹித்தலகிடா
மலையாளம் – இனிகர்ஷகான்சம்சாரிகட்டே

நம் வழி வேளாண்மை
45, டி.பி.எம். நகர்,
விராட்டிபத்து, மதுரை – 625 016.
தொலை பேசி : 0452– 2380082, 2380943.
இமெயில் vivekseva@gmail.com

ஆங்கில இதழ் முகவரி
Prof. Anil Gupta,
Honey Bee,
Indian Institute of Management,
Vastrapur, Ahmedabad -380 015
email: honeybee@sristi.org
www.nifindia.org ; www.sristi.org

நிரந்தர சொர்க்கம்

ஒரு சோம்பேறி உழைப்பில்லாமல் பக்தி, தானம் செய்யாமல் உண்பது, உறங்குவதாக இருந்து வந்தான். தன் மகனுடைய நிலைமையைப் பார்த்து தாயானவள் மகனின் வாழ்க்கை முறையை மாற்றியமைக்க பல பெரியோர்களிடம் அறிவுரை கேட்டார். மகன் ஏதாது ஒரு புண்ணிய செயல் மட்டும் பன்னி வாழ்க்கையை வாழ்ந்து முடித்தால் கூட போதும் என நினைத்தாள்.

எமதர்மராஜாவுக்கு புண்ணியம், பாவம் கணக்கை எழுதும் சித்ரகுப்தனை வருடத்தில் ஒரு முறை மட்டும் வணங்கினால் போதும் என்றும் இதன்படி மகனும் வருடத்தில் ஒருநாள் மட்டும் (சித்திரை பௌர்ணமி நாளில்) பயபக்தியுடன் தாயின் சொல்லை கடைபிடித்து வந்தான். பல ஆண்டுகள் கடந்து முதுமைநிலையை அடைந்தான். ஒரு நாள் அவனுக்கு கனவில் கீழ்கண்டவாறு கனவு வந்தது ''உனக்கு ஆயுள் முடியும் நாள் நெருங்கிவிட்டது. ஒரே ஒரு புண்ணிய செயலாக ஒரு குளம் மட்டுமே வெட்டி மாடுகள் நீர் குடிக்க பயன்படுத்துவாய் ; உனது ஆயுள் முடிந்த பின் யமதர்மர் ஆட்கள் உன்னை யமலோகம் கூட்டி செல்ல வருவார்கள்; தான் செய்த பாவ புண்ணியத்திற்கேற்றாற் போல் சொர்க்க லோகம் மற்றும் நரகலோகம் அனுபவிக்கச் சொல்வார். முதலில் சொர்க்கமா நரகலோகம் போக விரும்புவதை யமதர்மர் கேட்பார்; உடனே நீ முதலில் சொர்க்க லோகம் அனுபவித்து விட்டு பின் நரகலோகம் போகிறேன் என்று கூறிவிடு. பின்னர் மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன்'' என சித்திர குப்தன் கூறினார்.

கனவில் நடந்ததை நம்பி சோம்பேறியானவன் தன் வீட்டிலிருந்த பணம், சொத்து எல்லாம் சேர்த்து தனது கிராமத்தில் கால்நடைகள் நீர் குடிக்க குளம் வெட்டி விட்டான். கன்மாய் வெட்டியவுடன் மழை பெய்ததால் நீரும் நிரம்பிவிட்டது. இதில் எத்தனை கால்நடைகள் நீர் அருந்துமோ அந்தனை கால்நடைகள் நீர் குடித்த புண்ணியம் சோம்பேறிக்கு சேர்ந்துவிடும். தொடர்ந்து கால்நடைகள் பயன்படுத்த தொடர்புண்ணியம் சோம்பேறிக்கு சேர்ந்து கொண்டே வரும். குளம் வெட்டி முடிந்தபின் சோம்பேறியும் மரணமடைந்தான். கால்நடைகள் தொடர்ந்து நீர் குடித்து வர சோம்பேறியின் புண்ணியம் கூடி சொர்க்கத்திலேயே தங்கி விட்டார். தானம் செய்வதில் யுக்தியுடன் செயல்பட்டு பலன் பெற்றான் – ஆசிரியர்

கம்ப்யூட்டர் யுகத்தில் மாற வேண்டிய பஞ்சாங்கம்

உலகிலேயே முதன் முதலில் 12 ராசிகளையும் ராசிகளின் உருவங்களையும் உருவாக்கியவர்கள் வேத காலத்தில் வாழ்ந்த ரிஷி தீர்காத்மா என்பவர் . இராசி சக்கரத்தின் கூட்டு பாகை மையப்பகுதி 360 ஆகும். முதன் முதலில் நவ கிரஹங்களின் நிலைபாட்டை வைத்து நன்மை தீமைகளை முதலில் ஆராய்ந்தவர்கள் இந்தியர்களே. ஆரியபட்டர் தான் (கி.மு. 466–500) உலகம் தன்னை தானே சுற்றுவதால் இரவு பகல் உண்டாவதை உலகிற்கு முதலில் உணர்த்தினார். வியாசரின் படைப்புகள் மகாபாரதத்திலும், பாகவதப்புராணத்திலும் காணலாம். வியாசரின் காலம் கி.மு. 3200 ஆண்டுகள் ஆகும் என கூறப்படுகிறது. நமது இந்திய வல்லுனர்கள் ஜோதிடம் வானியல் தத்துவங்களைச் சேர்த்தே உருவாக்கியுள்ளனர். இதில் கால அளவு பற்றிய குறிப்புகள் உள்ளன. அதிகப்படியான காலம் ãu«khÉ‹ Míshf«. (3.1**x** 10^{14} வருடங்கள்). மிகச்சிறிய கால அளவு திருதி எனப்படும் 0.00045 வினாடியாகும்.

வான சாஸ்த்திரத்தில் பல உண்மைகளை நம் முன்னோர்கள் வெளிக்கொணர்ந்ததை அறிவியலுடன் சேர்த்து முறைப்படுத்துவது இன்றைய விஞ்ஞான யுகத்தின் தேவையாகும். இதனால் தற்பொழுது உள்ள நமது காலண்டரில் மாற்றங்கள் கொண்டு வர வேண்டும்.

சூரியன் அஸ்வினி நட்சத்திற்கு வரும் சமயம் (மேஷ ராசி) பகலும் இரவும் ஒரே அளவாக சமமாக இருக்கும் (**vernal equinox**). இது பூமத்திய ரேகையின் மையப் பாதையில் வரும் சமயமாகும். அன்று சூரியன் நடுப்பகலில் நமது உச்சியில் இருக்கும். இந்த நாளை உலகில் பல கலாச்சாரங்களில் முக்கியமான தினமாகக் கொண்டாடப்படுகிறது. இதனால் நமது முன்னோர்கள் இந்த நாளை வருடத்தின் முதல் நாளாக ஏற்றுக்கொண்டு காலண்டரை கணித்துள்ளனர். இதுவே இந்திய பஞ்சாங்கத்தில் சித்திரை 1 என்று முன்னர் இருந்தது. தற்பொழுதும் சித்திரை 1 வருடத்தின் முதல் நாளாக இருந்து வருகிறது. இந்த நாள் ஆங்கில காலண்டருக்கு ஏப்ரல் மாதம் 14 ஆகும். ஆனால் தற்சமயம் மார்ச் மாதம் 21 ம் நாளிற்க்கு சூரியன் தலைக்கு நேர் உச்சிக்கு வருகிறது. தற்சமயம் பங்குனி மாதம் 8 ம் நாளே (மார்ச் 21) அதாவது 23 நாட்கள் முன்னரே வந்து விடுகிறது. விஞ்ஞான அடிப்படையில் பூமியின் சுழற்சி பாதை நிரந்தரமாக உள்ள நட்சத்திரத்திலிருந்து சற்று விலகிச் செல்வதனால்தான் இந்த மாறுதல் உண்டாகிறது. பூமி முழுவதும் ஒரே அளவு விட்டம் கொண்ட கோளமாக இல்லாததால் (பூமியின் விட்டம் நடுப்பகுதியில் அதிகமாகவும் துருவ பகுதியில் குறைந்தும் உள்ளது). இந்த வித்தியாசம் என கூறப்படுகிறது. வருடத்திற்கு 501/4 வினாடி வித்தியாசம் ஏற்படுகிறது. ராசி வட்டத்தில் 23 டிகிரி ஆக வித்தியாசம் உள்ளது. அதாவது பங்குனி 8 க்கும் சித்திரை 1 க்கும் வித்தியாசம் 23 நாட்களாகும். $50^{1/4}$ x 1650 = 23 நாட்கள். இதன் மூலம் 1650 வருடங்களுக்கு முன்னர் சித்திரை 1 ஐ எப்படி நிர்ணயத்துள்ளனர் என்பதாக நாம் எடுத்துக் கொள்ளலாம்.

வேதகாலத்தில் கி.மு. 3200 ஆண்டுகளுக்கு முன்பு ரிஷபத்தில் (கார்த்திகை நட்சத்திரம்) சூரியன் வரும் சமயம் வருடப்பிறப்பு நடந்ததாக தைத்ரேய சம்ஹிதத்தில் கூறப்பட்டுள்ளது. அதாவது 46 நாட்கள் முன்னரே வந்ததாக உள்ளது. கி.பி. 2150ல் சூரியன் அவிட்டத்திற்கு (கும்பராசி) வரும் சமயம் பகலும் இரவும் ஒரே அளவாக இருக்கும்.

இந்த அறிவியல் உண்மையைக் கொண்டு ராஷ்ட்ரிய காலண்டர் 1957 ல் மத்திய அரசால் உருவாக்கப்பட்டது. இந்த காலண்டர் முறையை பல மாநிலங்கள் குறிப்பாக தமிழக அரசும் கடைபிடிக்கவில்லை. பாரம்பரியமாக பஞ்சாங்கம் கனிக்கும் பண்டிதர்கள் பழைய முறையையே பின்பற்றி வருகின்றனர். அறிவியல்படி தற்சமயம் பூமியின் நிலைபாடு கொண்டு புதிய காலண்டர் கணிக்கப்படவேண்டும். இதனால் நமது பாரம்பரியமும் அறிவியல் கொள்கையும் கைகோர்த்து செல்லும். நாம் இராஷ்ட்ரிய காலண்டரை பயன்படுத்தும் சமயம் கீழ்கண்ட மாற்றங்களை அனுசரிக்க வேண்டும். வருடப்பிறப்பு பங்குனி 8 (மார்ச் 21), உத்தராயாணம் ஆரம்பம் தை மாதத்திற்கு முன்னர் மார்கழியிலேயே ஆரம்பித்து விடும் (டிசம்பர் 22) தை பொங்கல் மார்கழி மாதம் 7 தேதி (டிசம்பர் 22) வைக்க வேண்டும். இதன்படி உதாரணமாக

விளம்பி ஆண்டு (2017–2018) ல் தமிழ் மாதங்கள் பின்வருமாறு துவங்கப்பட வேண்டும். சித்திரை (மார்ச் 21), வைகாசி (ஏப்ரல் 21), ஆனி (மே 22), ஆடி (ஜூன் 22), ஆவணி (ஜூலை 23), புரட்டாசி (ஆகஸ்ட் 23), ஐப்பசி (செப்டம்பர் 23), கார்த்திகை (அக்டோபர் 23), மார்கழி (நவம்பர் 22), தை (டிசம்பர் 22), மாசி (ஜனவரி 21), பங்குனி (பிப்ரவரி 20). கீழ்நோக்கு நாள், மேல் நோக்கு நாள் தற்சமயம் அறிவியல் பூர்வமாக பஞ்சாங்கத்தில் கணிக்கப்படவில்லை. வளர்பிறை, தேய்பிறை திதி நாட்களை மட்டும் சரியாகக் கணித்துள்ளது. சந்திரன் பூமியை சுற்றி வர 27.32 நாட்களாகும். சந்திரன் பூமியை சுற்றி வரும் சமயம் பூமியின் மேற்பரப்பில் அதிக நேரம் சந்திரன் தெரிந்தால் அப்பகுதியில் உள்ளவர்களுக்கு மேல்நோக்கு நாளாகும். பூமியின் வட கோள் பகுதியில் உள்ளவர்களுக்கு (உதாரணமாக இந்தியா) மேல்நோக்கு நாள் என்றால் தெற்கு கோள் பகுதியில் உள்ளவர்களுக்கு (உதாரணமாக நியூசிலாந்து) கீழ் நோக்கு நாளாகும். சந்திரன் பூமியை ஒரு முறை சுற்றி வர 27.3 நாட்கள் ஆகும். இதில் பாதி நாட்கள் (13–14) கீழ் நோக்கு நாட்களாகவும் மீதி பாதி நாட்கள் மேல் நோக்கு நாட்களாக இருக்கும். விவசாய வேலைகளை அனுசரிப்போர் பூமிக்கு கீழே விளையும் பயிர்களை (கிழங்கு, வேர்கடலை போன்றன) மேல் நோக்கு நாட்களில் விதைப்பர்.

பூமிக்கு தொலைவில் உள்ள நிலா நாள் (Apogee), பூமிக்கு அருகில் உள்ள நிலா நாள் (Perigee), சந்திரன் பதையும் சூரியன் பதையும் குறுக்கிடும் நாட்கள் (Node) போன்ற நிலைபாடுகளை கொண்டு விவசாய வேலைகள் துவங்குவது தற்பொழுது உயிராற்றல் வேளாண்மை பஞ்சாங்கத்தில் (Bio-dynamic agriculture calender) கடைபிடிக்கப்படுகின்றன. சந்திரன் நீர் குணம் கொண்ட கிரகமனாதால் அதிக நீர் பகுதி கொண்ட பொருட்களை (பூமியில் 70 சதம், தாவரங்களில் 90 சதம்) கவரும் தன்மையுடையது. எனவே இவைகளையும் நமது புதிய பஞ்சாங்கத்தில் சேர்த்து பயன் பெறலாம்.

தமிழக அரசும் இன்றைய கால கட்டத்தில் ராஷ்ட்ரிய காலண்டரை அனுசரிக்க ஏற்பாடு செய்யலாம்.

– ஆசிரியர்

நசீனா சீனய்யாவின் நெல்ரக விதை விநியோகம்

ஆந்திர மாநிலத்தில் நெல்லூர் ஜில்லா நரகூர் கிராமத்தில் நசீனா சீனய்யா (53) 10வது வரை படித்துவிட்டு சொந்த நிலம் 10 ஏக்கரில் விவசாயம் செய்து வருகிறார். இவர் பபட்லால் என்ற நெல் ரகத்தில் நல்ல விதைகளைத் தேர்வு செய்து நல்ல விளைச்சல் எடுத்து வருகிறார். இவர் இந்த இரகத்தை மேன்மைப்படுத்தி விவசாயம் செய்து நல்ல வருமானம் ஈட்டுகிறார்.

இவருடைய நெல்ரகத்தின் சிறப்பம்சங்களை கேள்விப்பட்டு பக்கத்து ஊர் விவசாயிகள் 50 நபர்களுக்கு 300 ஏக்கர் நிலத்தில் பயிர் செய்ய நெல் விதைகளையும் கொடுத்து வருகிறார். இவர்12' x 6' அடி பாத்தியில் நாற்றங்கால் விதைத்து 15 நாளில் நடவு செய்கிறார். நெல்நாற்றுகளை நடவு செய்யும் முன்னர் வயலில் பசுந்தாள் பயிரிட்டு நிலத்திலேயே உழுதுவிடுகிறார். இதனால் மண்ணின் வளம் கூடுகிறது.

பஞ்சகவ்யா தெளிப்பு :

சாணம் (5 கிலோ), நெய் (500 கிராம்) சேர்த்து பிசைந்து 3 நாட்கள் வைத்துவிடவேண்டும். பின்னர் 4வது நாளில் பால் (2 லிட்டர்), தயிர் (2 லிட்டர்), மாட்டு கோமியம் (2 லிட்டர்), கரும்புச்சாறு (3 லிட்டர்), வாழைப்பழம் (12),

திராட்சை பழச்சாறு (2 லிட்டர்) கலந்து 15 நாட்கள் புளிக்கவிட வேண்டும். நித்தமும் நன்கு கலக்கிவிட வேண்டும். 19வது நாளில் பஞ்சகவ்யா தயாராகிவிடும். இதிலிருந்து 3 லிட்டர் எடுத்து 100 லிட்டர் நீரில் கலந்து நெற்பயிருக்கு கீழ்க்கண்ட பருவத்தில் தெளிக்க வேண்டும். பூ பூப்பதற்கு முன்னர் – 2 முறை, 15 நாட்கள் இடைவெளியில்; பூபூத்தபின் – 2 முறை, 10 நாட்கள் இடைவெளியில், நெல் மணிபிடிக்கும் சமயம் ஒரு தடவை தெளிக்க

வேண்டும். நிலத்திற்கு 1 ஏக்கரில் 4 டிராக்டர் லோடு தொழுஉரம் இடுகிறார். இதனை உழவு செய்யும் முன்னர் தர வேண்டும்.

இவர் ஓர் ஏக்கரில் 6433 கிலோ மகசூல் எடுக்கிறார். சாதாரணமாக இந்த பபட்லால் ரகம் 4500 கிலோ மகசூல் மட்டுமே தரும்.

நசீனா சீனய்யா
நரசூர் கிராமம், கூடூர் மண்டல்
நெல்லூர் மாவட்டம்.
செல் : 9703546179

ஹனுமந்தப்பாவின் கலப்பு பயிர் விவசாயம்

கர்நாடக மாநிலத்தில் உத்தரகன்னடா மாவட்டம், சிர்சிக்கு அருகே பனவாசி கிராமத்தில் ஹனுமந்தப்பா (55) வசித்து வருகிறார். இவர் கூலி வேலை பார்த்து பிழைக்க பனவாசி கிராமத்திற்கு 20 வருடங்களுக்கு முன்னர் வந்தார். இவரது சொந்த ஊர் ஹாவேரி மாவட்டம் முத்லூர் கிராமமாகும். இவர் தனது மனைவி கமலம்மாளுடன் பனவாசிக்கு வந்து சென்னப்பாகவுடர் வீட்டில் தங்கி அவருடைய விவசாய நிலத்தில் வேலை பார்த்து வந்தார். இவர் வேலையில் ஈடுபாடுடன் இருந்ததைப் பார்த்து இவருக்கு 2 ஏக்கர் நிலத்தை குறைந்த விலைக்கு கொடுத்தார். இந்த 2 ஏக்கர் நிலம் மானாவாரி நிலமாகும். இதில் ஆரம்பத்தில் சோளமும், காய்கறி செடிகளும் பயிரிட்டனர். வருமானம் எடுத்து மேலும் ஒரு ஏக்கர் நிலம் வாங்கி விட்டனர். இப்பகுதியில் எஸ்.கே.ஏ.ஆர்.டி.பி என்ற தொண்டு நிறுவன விவசாய குழுவில் உறுப்பினராகி பல விவசாயிகளை சந்திக்கும் வாய்ப்பு கிட்டியது. இதன்பின் தனது நிலத்தில் பல வகையான பயிர்களை பயிர் செய்து தானே நேரிடையாக மக்களுக்கு விநியோகிப்பது என்பதை கொள்கையாகக் கொண்டார். இதனால் இடைத்தரகர்களிடமிருந்து விடுவித்துக் கொள்ளலாம். நேரிடையாக லாபம் விவசாயிக்கே வரும். இந்த கொள்கையில் வேலையாட்கள் உதவியில்லாமலேயே தனது குடும்ப உறுப்பினர்கள் மூலம் அனைத்து விவசாய வேலைகளையும் செய்து வந்தனர். கமலம்மாளும் நிலத்தின் வரப்புகளிலும், வாய்க்கால் கரைகளிலும், நடைபாதையிலும் பல வகையான தானியம், காய்கறி, பூச்செடிகள், பயறு வகைகள் என 30 வகையான பயிர்களைப் பயிரிட்டு கணவருடன் இணைந்து விவசாயம் செய்து வருகிறார்.

பருத்தியில் கடலையும், சோளத்தில் கடுகு, வேலியோரப்பயிராக அலசந்து, தட்டைப்பயிர், நடைபாதையோரம் பூச்செடிகள் (பூக்களில் 5–6 வகையான பூக்கள்), வரப்புகளில் காய்கறிப்பயிர்களான மிளகாய், வெண்டை மற்றும் குதிரைவாலி, துவரை, கம்பு, சாமை போன்ற சிறுதானியப்பயிர்கள் என பயிரிடுகின்றனர். கமலம்மாள் வெள்ளி, ஞாயிறு, திங்கள் கிழமைகளில் பூக்களைப்பறித்து தானே உதிரியாகவும், பூகட்டி மாலையாகவும் விற்பனை செய்கிறார். இதன் மூலம் நித்தமும் குறிப்பாக பண்டிகை சீசன்களில் ரூ.2000 கிடைப்பதாகக் கூறுகிறார்.

வருடத்திற்கு 3 ஏக்கரில் செலவு போக ரூ. 2 லட்சம் எட்டுவதாகக் கூறுகின்றார். சில வருடங்களில் மழை போதுமானதாக இருப்பதில்லை. இதனால் வருமானம் குறையுமாம். இவருடைய விவசாயத்திலுள்ள உழைப்பையும் உறுதிப்பாட்டையும் பாராட்டி பலவகையான பரிசுகளைப் பெற்றுள்ளார். உதாரணமாக தோட்டக்கலைத்துறை வழங்கும் சிறந்த விவசாயி விருதை 2015 லும், கர்நாடக வேளாண்மைப் பல்கலைக்கழக மாதிரி விவசாயி விருதை 2016 லும் பெற்றுள்ளார். இவருடைய நிலத்திற்கு கிளி, மைனா, குருவிகள் வருகின்றன.

ஹனுமந்தப்பா
பன்வாசி
சிர்சி தாலுகா
உத்தரகன்னடா மாவட்டம்
கர்நாடகா மாநிலம்
செல் – 7353008733

கால்நடைகளுக்கு வரும் நோய்களுக்கு

விஷக்கடி

அறிகுறிகள்

வாயில் நுரைதள்ளும் அதிகமாக வியர்க்கும் அமைதியாக இல்லாமல் அலைக்களிக்கும் தீனி எடுக்காது.

வைத்யம்

அடுப்புகரி 100 கிராம் எடுத்து 1 லிட்டர் பாலில் கலக்க வேண்டும். இத்துடன் 1 லிட்டர் நீர் சேர்த்து உள்ளே புகட்டவும். ஆட்டிற்கு பாதியளவு (1 லிட்டர்) உள்ளே தரவும். ஒரு நாளைக்கு ஒரு தடவை 2 நாட்கள் தரவும்.

மூக்கில் சளி

இது ஒரு சுவாச நோய். பாக்டீரியா கிருமிகள் மூலம் பரவுகிறது. கண்டங்கத்திரி பழம் – 2 , மிளகாய் பழம் அல்லது வத்தல் – 3, சுண்ணாம்பு கல்தூள் – 5 கிராம் சேர்த்து அரைத்து 1 லிட்டர் சுடு நீரில் கலந்து 20 நிமிடங்கள் வைக்கவும். வடிகட்டி ஆட்டுக்கு 1/2 லிட்டர், மாட்டுக்கு 1 லிட்டர் உள்ளே தரவும் . ஒரு நாளைக்கு 1 வேளை 2 –3 நாட்கள் தர வேண்டும்.

கோழி கழிச்சலுக்கு

சோற்றுக்கற்றாழை – 2 மடல், மிளகாய் பழம் – 4 , மயிலிகிரை – ஒரு கைப்பிடி அரைத்து 2 லிட்டர் நீரில் 6 மணிநேரம் ஊற வைத்து வடிகட்டவும். இதனை நித்தமும் 10–20 மி.லி சிரிஞ்சு மூலம் கோழிக்கு உள்ளே தரவும்.

மூக்கில் சளி (மூக்கடைப்பான்)

ஆடு மாடுகளில் மூக்கில் ஈ முட்டையிடுவதால் மூக்கில் சளி உண்டாகி சுவாசம் இடுவது சிரமத்தை உண்டாக்கும். இதற்கு கண்டங்கத்திரி பழம் மாட்டு கோமியத்தில் சுமார் 6 மணி நேரம் ஊற வைத்து மூக்கில் 3 சொட்டுகள் பிழிந்து விட வேண்டும். இதனை 2–3 நாட்கள் தொடர்ந்து கடைபிடிக்க வேண்டும்.

புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி ஊரில் 23–24 செப்டம்பர் தேதியில் நடைபெற்ற கால்நடை மூலிகை வைத்திய பயிற்சியின் போது மேற் செல்லப்பட்ட வைத்திய முறைகள் தொகுக்கப்பட்டன.

தொகுப்பு – பெ. விவேகானந்தன், சேவா

மாடு கொம்பு முறிவுக்கு

புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி தாலுகா குமரப்பன் வயல் வடக்கு தெருவில் வசிப்பவர் திரு, வி. இராசு . இவருக்கு வயது 65. இவர் 5ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவர் மாடு கொம்பு முறிவு மற்றும் கழிச்சலுக்கு போன்ற நோய்களுக்கு எளிய மூலிகை வைத்தியம் செய்து வருகிறார். இவர் வைத்தியத்தை தனது தந்தையிடமிருந்து கற்றுக் கொண்டார்.

கொம்பு முறிவு

காசிகட்டி – 20 கிராம், பாக்கு – 20 பாக்கு, புகையிலை – 1 பாக்கெட். மூன்றையும் அரைத்து முறிந்த கொம்பில் வைத்து காட்டன் துணி கொண்டு கட்டி விட வேண்டும். தினமும் காலை, மாலை அதன் மேல் தண்ணீர் ஊற்றி வர வேண்டும். அவ்வாறு செய்து வர நான்கு நாட்களில் குணமாகும்.

கழிச்சலுக்கு

காசிகட்டி – 20 கிராம், இடித்து வாழைபழத்தில் வைத்து பாதிக்கப்பட்ட மாட்டுக்கு உள்ளுக்குள் கொடுக்க உடனே குணமாகும்.

வீ. இராசு
த/பெ. வீரன்
வடக்கு தெரு, குமரப்பன் வயல்
மீமிசல் அஞ்சல், மணல்மேல்குடி தாலுக்கா
புதுகோட்டை மாவட்டம் – 614621

கால்காணை, வாய்க்காணைக்கு வைத்யம்

தற்சமயம் மழைகாலம் துவங்கி விட்டது. பசு மாடுகளுக்கு காணை நோயும் வர துவங்கி விட்டது. சிலர் எங்களை தொடர்பு கொண்டு இதற்கான வைத்யத்தை கூறுமாறு கேட்டனர். நாங்கள் சொன்னபடி கடைபிடித்து குணமானதை அவர்களே தெரிவித்தனர். சென்ற ஆண்டு பெங்களூரில் மாட்டுப்பண்ணை நடத்தி வரும் ஸ்ரீதர் மூர்த்தியின் அனுபவத்தை கீழே கொடுத்துள்ளோம்.

ஸ்ரீதர்மூர்த்தி, (வயது 58) பெங்களூரைச் சேர்ந்த இவர் கடந்த மூன்று வருடங்களாக மாட்டுப் பண்ணை நடத்தி வருகிறார். இவரின் மனைவி, ரெஜினி, வயது 50 , அரசு சாரா நிறுவனத்தை நடத்தி வருகிறார். மேலாண்மைப் பட்டம் பெற்ற இவர் தன்னார்வத்தால் மாட்டு பண்ணை நடத்தி வந்த போது பண்ணையில் உள்ள மாடுகளுக்கு கால்காணை வாய்காணை நோய் தாக்கியதை கண்டறிந்தார். பல ஆங்கில மருந்துகள் போன்றவற்றை பயன்படுத்தியும் நிவாரணம் கிடைக்க வில்லை.

இவரின் மனைவியின் உதவியால் ஸ்ரீதர் மதுரை, சேவா மையத்தை தொடர்பு கொண்டு தன் மாடுகளுக்கு நேர்ந்த கால்காணை வாய்காணை, நோய்க்கான பாரம்பரிய மூலிகை வைத்தியத்தை கண்டறிந்தார்.

இறுதியில் சேவா பரிந்துரைத்த பாரம்பரிய வைத்தியமான மருந்து கரைசலை பயன்படுத்தினார். அதன் தயாரிப்பு முறையானது, சுக்கு 50 கிராம், மிளகு 50 கிராம் வெள்ளைப் பூண்டு 50 கிராம், மஞ்சள் 50 கிராம், தேங்காய், வெல்லம் 200 கிராம் ஆகியவற்றை அரைத்து நீர் சேர்க்க வேண்டும். இதனை 200 மில்லி அளவு ஒரு நாளைக்கு ஒவ்வொரு மாட்டுக்கும் கொடுக்கப்பட்டது. மூன்றாவது நாளிலிருந்து நோய் குணமடைவது தெரிய வந்துள்ளது. கால் குளம்பில் ஏற்பட்ட புண்ணிற்கு தேங்காய் எண்ணெய், ஊமத்தை இலைச்சாறு சரிசமமாக சேர்த்து காய்ச்சி இறக்கும் சமயத்தில் மயில் துத்தம் சேர்த்து தைலமாக காய்ச்சி தடவ வேண்டும்.

இதற்கென தனி உணவுப் பழக்க வழக்கங்கள் பின்பற்றப்படவில்லை. நாக்கில் ஏற்பட்ட புண்களுக்கு கிளிசரின் 500 மி.லி மற்றும் வேலசின் 2 சதவிகிதம் சேர்த்து நாக்கில் தடவி வர புண் விரைவில் குணமடைந்து, மாடுகள் தினசரி தீவனத்தை எடுத்துக் கொண்டன.

ஸ்ரீதர்
424–5 வது மெயின்
கே.எஸ். டவுன்
கெங்கேரி
மைசூர் ரோடு
பெங்களூர் – 60
செல் – 9900351351

சிறு தானியங்கள் தரும் ஊட்டச்சத்து உணவுகள்

நாம் பாரம்பரியமாக உட்கொண்டு வந்த சிறுதானிய உணவு வகைகளின் பயன்பாடு காலப்போக்கில் குறைந்து விட்டன. தற்போது நாம் அதிகமாக உட்கொள்ளும் நெல் அரிசியை விட இந்த சிறு தானியங்கள் அதிக ஊட்டச்சத்து வாய்ந்தவை. எனவே அவை குறித்து அறிந்து நமது அன்றாட உணவில் சிறுதானிய உணவு வகைகளை ஒரு அங்கமாக இடம் பெறச் செய்வது ஆரோக்கியத்தைப் பேன வழி வகுக்கும். சிறுதானியங்கள் மூலம் உணவு தயாரிக்கும் வழிமுறைகள் சிலவற்றை கொடுத்துள்ளோம்.

கேழ்வரகு வடை

தேவையான பொருட்கள்: கேழ்வரகு மாவு – 250 கிராம், உளுந்து – 500 கிராம், மிளகாய் – 4, இஞ்சி, பூண்டு – 4 , சீரகம் – 1 தேக்கரண்டி, மிளகு – 1/2 தேக்கரண்டி , பெருங்காயம் – 1 சிட்டிகை, உப்பு – தேவையான அளவு, கறிவேப்பிலை – 2 நறுக்கியது, சின்ன வெங்காயம் – 1/2 குவளை /125 கிராம், கொத்தமல்லி – 1 கைப்பிடி, எண்ணெய் – தேவையான அளவு.

செய்முறை ; உளுந்தை ஊற வைத்து மிளகாய், இஞ்சி, பூண்டு, சீரகம், மிளகு, பெருங்காயம், உப்பு இலை அனைத்தையும் ஒன்றாக வடை பதத்திற்கு அரைத்துக் கொள்ளவும் அதனுடன் கேழ்வரகு மாவு, கறிவேப்பிலை , சின்ன வெங்காயம், கொத்தமல்லி இலை அனைத்தையும் ஒன்றாகக் கலந்து அடையாகத் தட்டி எண்ணெயில் பொறித்தெடுக்கலாம்.

கேழ்வரகு இட்லி

தேவையான பொருட்கள்: கேழ்வரகு மாவு – 1 குவளை / 250 கிராம், உளுந்து – 1/4 குவளை, வெந்தயம் – 2 தேக்கரண்டி , உப்பு – தேவையான அளவு.

செய்முறை : கேழ்வரகு, உளுந்து வெந்தயம் முதலியவற்றை 6 மணி நேரம் ஊற விட்டு இட்லி மாவு பதத்திற்கு அரைத்தெடுக்கவும். மாவு கலவையை உப்பு சேர்த்து 6 மணி முதல் 8 மணி நேரம் புளிக்க விட்டு இட்லியாக ஆவியில் வேக விடவும். சுவையான இட்லி தயார்.

சிறு தானிய சுண்டல்

கேழ்வரகு / சிறுதானியம் – 1 குவளை / 250 கிராம், வெந்தயம் – 250 கிராம், பச்சைமிளகாய், தேங்காய் (துருவியது) – தேவையான அளவு , பச்சை பயிறு – 1 குவளை /250 கிராம், கடுகு. உப்பு – தேவையான அளவு , எண்ணெய் – 20 மி.லி. , கொத்தமல்லி – நறுக்கியது, கறிவேப்பிலை – 1 கொத்து.

செய்முறை: கேழ்வரகு மற்றும் பச்சை பயிறு ஆகிய இரண்டையும் வேக வைத்து எடுத்த கொள்ளவும். ஒரு பெரிய பாத்திரத்தில் சிறிதளவு எண்ணெய் ஊற்றி அவற்றில் கடுகு, கறிவேப்பிலை, பச்சை மிளகாய், தேங்காய் மற்றும் நறுக்கிய வெங்காயம், கொத்தமல்லி ஆகியவற்றை தேவையான உப்பு சேர்த்து பொன்னிறமாக வதக்கிய பின்னர் அவற்றுடன் வேக வைத்துள்ள கேழ்வரகு மற்றும் பச்சை பயிறு ஆகியவற்றை சேர்த்து இறக்கினால் கேழ்வரகு சுண்டல் தயார்.

கேழ்வரகு லட்டு

தேவையான பொருட்கள்: கேழ்வரகு மாவு – 1 குவளை / 250 கிராம், வெல்லம் – 1 குவளை / 250 கிராம் , நெய் – 200 மி.லி, முந்திரி– 1 தேக்கரண்டி, திராட்சை – 1 தேக்கரண்டி, ஏலக்காய் தூள் – 1 சிட்டிகை, உப்பு – அரை சிட்டிகை .

செய்முறை: கேழ்வரகு மாவை சிறு தீயில் வறுத்து துருவிய வெல்லத்துடன் கலந்து நெய்யில் வறுத்த முந்திரி, திராட்சை, ஏலக்காய்தூள், சுக்குத்தூள், உப்பு சேர்த்து உருண்டைகளாக உருட்டவும்.

சாமை முறுக்கு

தேவையான பொருட்கள் : சாமை அரிசி மாவு – 1 குவளை / 250 கிராம், கடலை மாவு – 1 குவளை / 250 கிராம், எள்ளு – 2 மேசைக்கரண்டி , வெண்ணெய் – 1 மேசைக்கரண்டி, ஓமம் – 1 தேக்கரண்டி, மிளகாய் தூள் – 1 தேக்கரண்டி, பெருங்காயம் –1 சிட்டிகை, உப்பு – தேவையான அளவு

செய்முறை : சாமை அரிசி மாவு, கடலை மாவு , உப்பு சேர்த்து நன்கு சலித்துக் கொள்ளவும். சலித்த மாவுடன், வறுத்த எள்ளு, ஓமம், வெண்ணெய் , மிளகாய் தூள், பெருங்காயம் இவை அனைத்தையும் ஒன்றாக கலந்து சிறிது நீர் சேர்த்து முறுக்கு பதத்திற்கு பிசைந்து கொள்ளவும். எண்ணெய் காய்ந்தவுடன் முறுக்கு அச்சில் பிழிந்து எண்ணெயில் பொறித்து எடுக்கவும்.

சாமை, தினை, பனிவரகு மிளகுப்பொங்கல்

தேவையான பொருட்கள் : சாமை/தினை/பனிவரகு அரிசி – 300 கிராம், பாசிபருப்பு – 100 கிராம், இஞ்சி – 20 கிராம், முந்திரி – 30 கிராம், சீரகம் – 1/2 மேசைக்கரண்டி, மிளகு – 1 மேசைக்கரண்டி, கறிவேப்பிலை – 2 கொத்து, நெய் – 100 மி.லி, உப்பு – தேவையான அளவு.

செய்முறை: சாமை / தினை / பனிவரகு ஆகியவற்றை நன்கு கழுவி பாசிப்பருப்புடன் வேக வைத்துக் கொள்ளவும். நெய்யில் இஞ்சி, சீரகம், மிளகு, கறிவேப்பிலை ஆகியவற்றை போட்டு தாளித்து எடுத்துக் கொள்ளவும். முந்திரியை தனியாக நெய்யில் வறுத்து தாளித்தவற்றையும் வேக வைத்த சாமையுடன் சேர்த்தால் சாமை / தினை/ பனிவரகு மிளகுப்பொங்கல் தயார்.

சிறுதானிய ஊத்தாப்பம்

தேவையான பொருட்கள் : குதிரைவாலி அரிசி, வரகு அரிசி, திணை அரிசி, சாமை அரிசி, கேழ்வரகு – ஐந்தும் சரியான அளவுகளில் மொத்தம் 4 குவளை . உளுந்து – 1 குவளை, வெந்தயம் – 3 மேசைக்கரண்டி, உப்பு – தேவையான அளவு, கேரட் – 1 கப் துருவியது, கொத்தமல்லி – 1 கொத்து, (பொடியாக நறுக்கியது) எண்ணெய் – தேவையான அளவு.

செய்முறை : சிறுதானியங்களை 6 மணி நேரத்திற்கு மேல் ஊற வைத்து உளுந்துடன் வெந்தயம் சேர்த்து 1 மணி நேரம் ஊற வைக்கவும். நன்றாக தோசை பதத்திற்கு அரைத்து ஒரு நாள் புளிக்க வைக்கவும். மாவை உப்பு சேர்த்து ஊத்தாப்பமாக வார்த்து அதில் துருவிய கேரட் நறுக்கிய கொத்தமல்லி இலையை தூவி வேக விட்டால் சுவையான ஊத்தாப்பம் தயார்.

கேழ்வரகு மால்ட்

(குழந்தைகளுக்கு மிக உகந்த உணவு)

தேவையான பொருட்கள் : கேழ்வரகு மாவு – 500 கிராம், வெல்லம் / சர்க்கரை – 200 கிராம், தண்ணீர் – 2 லிட்டர், ஏலக்காய் பொடி – தேவையான அளவு.

செய்முறை : கேழ்வரகு நன்றாக சுத்தம் செய்து தண்ணீரில் 8 முதல் 10 மணி வரை ஊற வைக்கவும். நீரை வடிகட்டிய பின்பு

ஊறியுள்ள கேழ்வரகை சுத்தமான ஈரத்துணியில் கட்டி 48 மணி நேரம் வைத்து முளை வரவிடவும். துணியின் ஈரம் காயாமலிருக்க சிறிது நீரை அவ்வப்போது தெளிக்க வேண்டும். முளை கட்டிய

கேழ்வரகை வெயிலில் நன்றாக உலர்த்திய பின் வானலியில் போட்டு நன்கு மணம் வரும் வரை வறுத்து முளையை நீக்கி சுத்தம் செய்யவும். பின்பு மாவாக அரைத்து கொள்ளவும்.

முளைக்கட்டிய ராகி தண்ணீரில் முளைகட்டிய கேழ்வரகு மாவைச் சேர்த்துக் கட்டியில்லாமல் கலக்கிக் கொதிக்க வைக்கவும். இத்துடன் வெல்லம் / சர்க்கரை / ஏலக்காய்த் துளை சேர்த்து கலக்கி அருந்தலாம்.

ஆறடி உயர வாழைதார்

அபிசேக் என்ற 10 வது படிக்கும் மாணவன் பள்ளியில் படித்து கொண்டிருக்கும் பொழுது வீட்டு வேலைகளையும் கவனித்து கொண்டு வருவார். வீட்டு சமையல் அறை கழிவுகளை வாழைக்கு மூடாக்கு போட்டு உரமாக்க விட்டு விடுவார். இதனால் இவர் வீட்டு தோட்டத்திலுள்ள வாழை, முருங்கை போன்ற மரங்கள் சிறப்பாக காய்க்கின்றன. நன்கு வளர்ந்த மரத்தில் 10 மாதங்களுக்கு பின் வாழை தார் போட்டுள்ளது. வாழை மரத்தில் 6 அடி உயர வாழை தார் போட்டுள்ளது. இதில் 300 க்கும் மேற்பட்ட வாழைகாய்கள் விளைந்துள்ளன. எங்கள் வீட்டு தோட்டத்தில் இது போன்று 10 நாட்டு ரக வாழை மரங்களை வளர்த்து வருகிறோம். இது வரை குறைந்தது 5 அடி முதல் 7 அடி வரையிலான 20 வாழை தார்கள் உள்ளன.

அபிசேக்
த/பெ. ஜெயபாண்டியன்
122, சீனிவாச குறுக்கு தெரு
டி.வி.எஸ் நகர்
மதுரை – 625003
செல் : 9843618140

புரோட்டா தயாரிக்கும் இயந்திரம்

திரு. செந்தில் (வயது 36) மதுரை மாவட்டம் மேலூரில் லேத் ஒர்க்ஷாப் நடத்தி வருகிறார். இவர் அவ்வப்போது புது மாதிரியான கருவிகளை கண்டுபிடித்து விவசாயிகளுக்கும், கிராம மக்களும் பயன்படுத்தி செலவை குறைக்க வழி செய்கிறார். தற்போது அவர் புரோட்டா தயாரிக்கும் இயந்திரம் ஒன்றை கண்டுபிடித்துள்ளார். இதில் சாதாரணமாக ஒரு கிலோ மைதா மாவில் கையால் உருட்டினால் 30 எண்ணிக்கையிலான புரோட்டா மட்டுமே வரும் . ஆனால் இவர் கண்டுபிடிப்பில் ஒரு கிலோ மைதா மாவில் 35 புரோட்டா வருவதாகவும் அதை இரண்டே நிமிடத்தில் செய்து விடலாம் என கூறுகிறார். இக்கருவியின் மூலம் ஒரு மணி நேரத்தில் 24 கிலோ மைதாவைக் கொண்டு 840 புரோட்டா செய்து விடலாம் என கூறுகிறார்.

எஸ். செந்தில்
த/பெ. சுப்ரமணியன்
தாண்டவன் இன்ஜினியரிங் ஒர்க்ஸ்
சிவகங்கை ரோடு, மேலூர், மதுரை மாவட்டம்
செல் : 9944437098

தறியை இலகுவாக இயக்க புது உத்தி

திருப்பூர் மாவட்டம், மேட்டு பாளையம் தாலுகா, சிறுமுகை கிராமத்தில் வசித்து வரும் திரு. காரப்பன், வயது 68 . தந்தை பெயர் வெங்கட்ராமன். இவருக்கு மனைவி, 2 மகன், 2 மகள் உள்ளனர். சிறுமுகை கிராமத்தை பூர்வீகமாக கொண்ட காரப்பன் பள்ளி செல்லாதவர். கவுடர் சமூகத்தை சேர்ந்த இவர் ஆரம்பத்தில் தனது குடும்ப தொழிலான விவசாய வேலைகளை செய்து வந்துள்ளார். குடும்பத்தில்

ஏற்பட்ட வறுமை காரணமாக விவசாயம் செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. 1960களில் நெசவாளர்களின் வருமானம் விவசாயிகளுடைய வருமானத்தை விட கூடுதலாக இருந்தது. இச்சமயத்தில் இவரது தாயாரின் ஆலோசனையின்படி சாப்பாட்டிற்காக தறி நெய்ய கற்றுக் கொண்டார்.

ஒரு சமயம் பெங்களூர் சென்ற போது அங்கு செயல்பட்டு வந்த பட்டு தறியை பார்த்த அவர் பட்டு நெசவு செய்ய கற்றுக் கொண்டார். அங்கே சில மாதங்கள் தங்கி பட்டு நெசவு தொழிலை முழுமையாக கற்று கொண்டார். சிறுமுகை திரும்பிய காரப்பன் முதன் முதலாக 1975ல் பட்டு தறியை ஆரம்பித்தார். இவரால் அறிமுகபடுத்தப்பட்ட தறி பெருகி இன்று சிறுமுகை கிராமத்தை சுற்றி (18 கி.மீ. சுற்றளவில்) பல ஊர்களில் சுமார் 10,000 தறிகள் இயங்கி வருகின்றன என கூறுகிறார்.

வேலை தேடி இளைஞர்கள் வெளியூர் செல்வதை தவிர்க்கவும். நெசவு தொழிலை ஊக்கப்படுத்துவதற்காகவும் பயிற்சி கூடம் ஒன்றை கட்டி வருகிறார். (கட்டிடம் கட்டப்பட்டு தறிகள் பொருத்தப்பட்டு வருகின்றது).

பள்ளி கூடம் சென்று படிக்காதவர் நெசவு தொழிலில் கொண்ட ஈடுபாடு காரணமாகவும், நீண்ட கால லட்சியத்தை நிறைவேற்றும் " வகையில் கைத்தறி பெட்டகம் மற்றும் கைத்தறி களஞ்சியம்" என இரண்டு நூல்கள் வெளியிட்டு தமிழ் பேரகராதியில் இடம் பெற்றுள்ளார்.

கைத்தறியில் மாற்றம்



சிக்கன் குன்யா என்ற நோயினால் மக்கள் மூட்டுவலியால் பாதிக்கப்பட்டு நெசவு தொழில் ஈடுபடுவது கஷ்டமாக இருந்தது. இந்த நேரத்தில் கால்களை பயன்படுத்துவதற்கு பதிலாக மின்சார மோட்டார் உதவியால் மிதி கட்டையை இயக்கி நெசவு தொழில் பாதிப்படையாமல் இருக்க தறியில் மாற்றம் செய்தார். மேலும் ஒரு கை, ஒரு கால் மட்டும் கொண்டு நெசவு செய்யும் கருவியை வடிவமைத்து வருகிறார். இதில் 4 சக்கரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இதில் 50 சதவீதம் உழைப்பு குறைகிறது. இந்த கருவி முடிவுறும் தருவாயில் உள்ளது. இதனுடைய விலை ரூ. 75,000 ஆகும். தமிழ் நாட்டில் காஞ்சிபுரம், ஆரணிக்கு அடுத்து சிறுமுகை கிராமம் பட்டு தொழிலில் 3 வது இடத்தை பிடித்துள்ளது இவருடைய உழைப்பும் முயற்சியால் தான் என்றால் அது மிகையாகாது.

நெசவு தொழிலில் குறைபாடும் முக்கியத்துவமும்

1. வேளாண் துறைக்கு அடுத்தப்படியாக அதிக மக்கள் செய்யும் வேலை ஜவுளித்துறை. ஆனால் அவர்களுக்கு அரசாங்காத்தால் போதிய அங்கீகாரம் கிடைக்க வில்லை என கூறுகிறார்.

2. பணம் சம்பாதிக்க இளைஞர்கள் வேலை தேடி செல்ல வேண்டாம் நெசவு தொழில் செய்தால் பணம் நம்மை தேடி வரும் .

3.பட்டு தறியில் வேலை செய்பவர்கள் அதிக கஷ்டமின்றி வேலை செய்கிறார்கள். அவர்கள் அதிக ஊதியம் பெறுகிறார்கள். ஜமுக்காளம், போர்வை நெய்யும் நெசவாளியின் உழைப்பு அதிகம். ஆனால் ஊதியம் குறைவு என கூறுகிறார்.

ஆடை இல்லா மனிதன் அரை மனிதன் என்பது தவறு. ஆடை இல்லா மனிதன் அறை மனிதன் என்கிறார்.

மண்ணில் விளைந்ததை சாப்பிட வேண்டும். நெசவில் நெய்ததை உடுத்த வேண்டும்.

ஆரம்பத்தில் அதாவது 40 ஆண்டுகளுக்கு முன்பு வறுமை கோட்டிற்கு கீழ் இருந்த இவரது குடும்பம் தற்பொழுது மாதத்திற்கு ரூ, 1 லட்சம் சம்பாதிக்கிறார்கள். இவரது கூட்டு குடும்பத்தில் இவருடைய குமாரர்கள், மருமகள்கள் அனைவரும் 13 நபர்கள் நெசவு தறி தொழிலில் முழுமையாக ஈடுபட்டுள்ளனர்.

வி. காரப்பன்
32 சி, சில்க் பஜார், சிறுமுகை அஞ்சல்
மேட்டுப்பாளையம் தாலுகா, கோயமுத்தூர் – 641302
செல் : 9865924102

குறைந்த நிலத்தில் நிறைந்த வருமானம்

200 குழி நிலத்தில் நான் சொந்தமாக எள் விதை தெளித்து பயிர் அறுக்கும் காலம் வந்துவிட்டது. 75 நாட்கள் நிலம் ஒத்திக்கு ரூ.4000 ம் – விதை 2 கிலோ – ரூ 200, உரம் – ரூ. 200 வேலையாள் தினக்கூலி – 100 வீதம் 20 நாட்கள் எல்லாம் செலவு ரூ.6800. பலன் 11/2 மூட்டை எள் எனக்கு கிடைத்தது. இதன் விலை சுமார் ரூ.14,800 வரை கிடைத்தது . நான் பட்டம் தவறி விதை தெளித்தனால் இந்த தொகை. பட்டத்தில் விதைத்திருந்தால் சுமார் ரூ. 20,000 வரை கிடைத்திருக்கும். 50 குழியில் உளுந்து விதைத்து இருக்கிறேன். விதை உளுந்து 2 கிலோ ரூ.150. வயலுக்கு ஒத்தி ரூ 300. 3 மாதத்திற்கு தண்ணீர் ரூ. 300 (மோட்டார் வாடகை) உரம் ரூ. 200, கூலி – ரூ. 500. கிடைத்தது 3 மாதத்தில் ரூ. 8000. சிறு தானியம் மற்றும் கீரை விதை ஊடுபயிராகவும் வீட்டிற்கு தேவையானதை போட்டுக் கொண்டு சம அளவு பணத்துடன் சிறுக சிறுக சேர்த்து வைத்துள்ளேன். புரட்டாசி மாதம் முதல் தேதியன்று ரூ. 160 – 2 கிலோ கேழ்வரகு 250 குழி நிலத்தில் பயிரிட்டால் கார்த்திகை மாத இறுதியில் சுமார் 12 மூட்டை கேழ்வரகு சர்வ சாதரணமாக கிடைக்கும். செலவு ஒத்திகைக்கு நிலம் ரூ. 2000/– உழவு ரூ. 500 + தண்ணீர் பாய்ச்ச 3 மாதம் ரூ. 500 /– வேலையாள் 1 நபர் சம்பளம் ரூ. 1000 செலவு மொத்தம் ரூ.4000. நமக்கு செலவு போக லாபமாக கிடைப்பது ரூ. 2200 முதல் ரூ 2800 வரை கிடைக்கும். சுலபமான வேலைகேழ்வரகு கொத்துக் கொத்தாக காய்த்து பலன் கிடைக்கும். அடி உரம் வேப்பம் பிண்ணாக்கு, ஆட்டு புழுக்கை வேறு எதுவும் தேவையில்லை.

நா. தனசேகரன்
2/41 அக்ரஹாரம்
சூலமங்கலம், பசுபதிகோவில் அஞ்சல்
தஞ்சாவூர் மாவட்டம்
செல் : 9715109946

பாரம்பரிய கத்திரி இரகம்

கர்நாடகா மாநிலம் , லட்சுமிபாய் சுலாபி என்பவர் இந்தபாரம்பரிய இரகத்தைபாதுகாத்து வருகிறார். இவருடைய மாமனார் 50 வருடங்களுக்கு முன்னர் பாகல்கோட் அருகே உள்ள உளியால் வனத்திலிருந்து இந்த மலை கத்திரிக்காய் ரகத்தை கொண்டு வந்தார்.

இதற்கு HZKB – 1 கத்திரி என பெயரிட்டுள்ளார். இது தேசிய கண்டுபிடிப்பு அறக்கட்டளையின் எட்டாவது சுற்று போட்டியில் விருது பெற்ற ரகம் . இது பெரிய வட்டக் கத்தரி வகை ஆகும். இந்த காய்கள் மினுமினுப்பான தோற்றம் கொண்டவை. அடர்த்தியான ஊதா நிறத்தில் தோன்றும். சுவை மட்டுமல்லாது இதில் ஒரு காய் 2.5 கிலோ எடை கொண்டதாக இருக்கும். முதிர்ச்சிக்குப் பிறகே விதைகள் உருவாகும். இதனால் மக்கள் இதனை விரும்புகின்றனர். இதனை 7 நாட்கள் வரை வைத்திருந்து பயன்படுத்தலாம். மகசூல் ஏக்கருக்கு 35 – 40 டன் கிடைக்கும். இது செம்மண் நிலத்திற்கு உகந்தது.

லட்சுமிபாய் சுலாபி
கர்நாடகா மாநிலம்

பெருமாளுக்கு பரிசு

நெல் விதைக்க ஓர் ஏக்கருக்கு குறைந்தளவு விதையான 300 கிராம் விதைத்து இந்த தொழில் நுட்பத்தை முறைப்படுத்தியதால் நடிகர் சூரியாவிடமிருந்து இவருக்கு ரூ. 2 லட்சம் கிடைத்தது. பாரம்பரிய நெல் ரகங்களை பாதுகாத்து வரும் திருவாரூர் திரு. ஜெயராமுக்கும் ரூ. 2 லட்சம் பரிசு கிடைத்தது.

ஆர். பெருமாள்
த/பெ. ரெங்கராஜ்
34, ஆலங்குடி அஞ்சல்
குத்தாலம் தாலுகா
நாகப்பட்டிணம் மாவட்டம் – 609801
செல் : 9486835547, 9486525672

கமல் நெல் ரகம்

கமல் நெல் ரகத்தை சத்தீஸ்கர் மாநிலத்தில் ரோஹித்சாகு என்பவர் உருவாக்கியுள்ளார். இவர் பாரம்பரிய நெல் ரகமான ஜவாபுல் என்ற ரகத்திலிருந்து தேர்வு செய்து உருவாக்கியுள்ளார். இந்த நெல்லின் சிறப்பு தன்மைகள் : அரிசி பச்சை நிறம், நல்ல ருசி, சன்ன அரிசி, நல்ல வாசனை சர்க்கரை சத்து உள்ளவர்களுக்கு உகந்தது.

வயது : 140–145 நாட்கள். இவர் ஏக்கருக்கு 10 கிலோ விதைக்கிறார். ஆடி பட்டத்தில் நடவு செய்கிறார். விளைச்சல் ஏக்கருக்கு 12 குவிண்டால்.

இந்த நெல்லை உருவாக்கிய ரோஹித்சாகுக்கு அஹமதாபாத்திலுள்ள தேசிய கண்டுபிடிப்பு அறக்கட்டளை விருது கிடைத்துள்ளது.

இந்த நெல்லை உற்பத்தி செய்ய தமிழ்நாட்டில் உள்ள நாகைமாவட்டம், ஆலங்குடி பெருமாள் முன்வந்துள்ளார்.

இந்திராசன் நெல் ரகம்

இது பெருவெட்டான நெல் . வயது : 120 நாட்கள் . ஓர் ஏக்கருக்கு 34 குவிண்டால் விளைச்சல் கிடைக்கிறது. இந்த நெல்லுக்கு அஹமதாபாத்திலுள்ள தேசிய கண்டுபிடிப்பு அறக்கட்டளை விருது கிடைத்துள்ளது. இந்த நெல் ரகத்தை உத்ரகண்ட் மாநிலத்தில் பிரஹாம்சிங் என்பவரின் தந்தை காலமான இந்திராசன்சிங் உருவாக்கி இருந்தார். இந்த நெல் ரகம் பூச்சி தாக்காத ரகமாகும்.

இந்த நெல்லை உற்பத்தி செய்ய தமிழ்நாட்டில் உள்ள நாகைமாவட்டம், ஆலங்குடி பெருமாள் முன்வந்துள்ளார்.

பிரஹாம்சிங்
இந்தர்பூர் கிராமம்
பிரதாப்பூர் மாவட்டம்
உத்தமசிங் நகர்
உத்ரகண்ட்மாநிலம்
செல் : 9927325139

கோழி கழிச்சலுக்கு

புதுக்கோட்டை மாவட்டம், நாட்டாணி புரச குடி பஞ்சயத்து, பாதரகுடி கிராமத்தில் வித்யா மோரி 9 ம் வகுப்பு வரை படித்துள்ளார். அவருக்கு கல்யாணம் ஆகி 13 வருடம் ஆகின்றது. கணவர் பி.எல். ஹாஸ்டலில் பணிபுரிகின்றார். இவர்களுக்கு 2 மகன்கள் உள்ளனர். இவருடைய அம்மாவிட்டிலிருந்து 5 நாட்டு கோழிகளை எடுத்து வந்து வளர்த்துள்ளார். தற்பொழுது வித்யா மோரியிடம் 13 கோழிகளும் குஞ்சுகளும் உள்ளன. இந்த கோழிகளுக்கு ஏற்படும் கழிச்சலுக்கு இவர் கொடுத்த மருந்து சோற்றுக் கற்றாழை. ஏப்ரல், மே மாதத்தில் வெயில் அதிகமான காலத்தில் காலையில் கூட்டை விட்டு கோழிகளை எடுத்து தண்ணீர் உள்ள வாளியில் நன்கு நனைத்து விட வேண்டும். அவ்வாறு செய்யும் பொழுது உடம்பு சூடு குறைகின்றது. இது போல் செய்து மூன்று நாட்கள் கழித்து சோற்றுக் கற்றாழை முள்ளை எடுத்து விட்டு சிறு துண்டுகளாக வெட்டி மிக்சியில் அரைத்து கூழ்ஆக்கி சிரிஞ்சில் குஞ்சுகளுக்கு காலை கூண்டிலிருந்து எடுத்தவுடன் குஞ்சுகளுக்கு 1/4 சிருஞ்சும் பெரிய கோழிக்கு 1/2 சிரிஞ்சும் ஊற்றி விட வேண்டும். ஒரு முறை கொடுத்து பின் மறு முறை நான்கு நாட்களுக்கு அல்லது மூன்று நாட்களுக்கு பின் கொடுக்க வேண்டும். இவ்வாறு கொடுப்பதால் கழிச்சல் குறையும் என தன்னுடைய அனுபவத்தை தெரிவித்துள்ளார். இப்படி கொடுப்பதால் கோழிகள் நல்ல வளர்ச்சி அடையும்.

கோழி அதிகமான கொழுப்பு அடைந்து முட்டை இடாமல் இருந்தால்

சில கோழிகள் அதிகமான கொழுப்பு வைத்து முட்டை இடாமல் இருக்கும் . அந்த பெட்டை கோழிகளுக்கு காய்ந்த மிளகாய் வற்றலை அரைத்து மிளகு அளவு

எடுத்து ஒரு நாளைக்கு ஒரு உருண்டை வீதம் மூன்று நாட்கள் கொடுத்தால் கொழுப்பு கரைந்து முட்டை இடும்.

முட்டைகள் சீராக பொரிக்க

சில கோழிகள் அடைக்காக்க வைக்கும் பொழுது 1 குஞ்சு பொரித்து மற்ற முட்டைகள் பொரிக்காமல் இருக்கும். அந்த கோழி இடும் முட்டைகளை முட்டை இட்டவுடன் அந்த முட்டையை எடுத்து பிரிஸ்சில் வைக்க வேண்டும். இது போல செய்து 10 முட்டைகள் வந்ததுடன் அதனை பொரிக்க வைக்க முட்டைகளை பிரிஸ்சிலிருந்து எடுத்து அதன் குளிர்தன்மை சென்ற பின் தண்ணீரில் கழுவி துடைத்த பின் கோழியை அடைக்காக்க வைக்க வேண்டும். கோழியினுடைய வெப்பம் எல்லா முட்டைகளினின் மேல் விழும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். இரண்டு நாட்களுக்கு ஒரு முறை கோழியை வெளியில் எடுத்து விட வேண்டும். இது போல செய்து வந்தால் 21 அல்லது 22 நாட்களில் குஞ்சு பொரிக்கும்.

வித்யா மேரி
பாதரகுடி
இடையலூர் அஞ்சல் –614 629
பொன்பேத்தி வழி
புதுக்கோட்டை மாவட்டம்
செல் – 8489779582

கால்நடை மூலிகை வைத்ய பயிற்சி

சேவா தொண்டு நிறுவனம் கால்நடை மூலிகை வைத்ய பயிற்ச்சி கொடுத்து வருகின்றது. வேல்டு விசன் என்ற தொண்டு நிறுவனத்துடன் இணைந்து விருதுநகர் மாவட்டத்தில் ஆடு வளர்ப்போர்க்கு மூலிகை பயிற்சியை ஜூன் மாதம் 12,13 ம் (2018) தேதிகளில் கொடுத்தது. இந்த இரண்டு நாட்கள் பயிற்சியில் ஆடு வைத்திருக்கும் மக்களுக்கு கால்நடைகளுக்கு வரும் நோய்களை எப்படி இயற்கை முறையில் இலை தழைகள் கொண்டு மூலிகை வைத்திய தயாரிப்புகளை செய்முறை பயிற்சியாக செய்து காண்பிக்கப்பட்டது. அதில் மாடுகளுக்கும், ஆடுகளுக்கும் மாதம் 1 முறை கொடுக்கும் மசால் உருண்டை, மற்றும் மத்தன் தைலம், மடிநோய்க்கான மருந்து என சில வைத்திய முறைகளை கற்றுக் கொடுக்கப்பட்டது.

கற்றுக் கொடுத்து தயாரித்த மருந்துகளை ஆடுகளுக்கு செங்குன்றம், வள்ளியூர், செங்கோட்டை, உந்தரபட்டி நாராயணபுரம், சிவஞானபுரம் ஆகிய கிராமங்களில் கொடுத்தார்கள். ஜூன் மாதம் நடந்த பயிற்சிக்கு பின் அதன் தொடர்ச்சியாக செப்டம்பர் மாதம் 12ம் தேதி 1 நாள் கால்நடை மூலிகை வைத்ய பயிற்சி கொடுக்கப்பட்டது. அந்த பயிற்சியில் கலந்து கொண்டவர்கள் மசால் உருண்டை கொடுத்த ஆடுகள் நன்றாக இருப்பதாகவும் அந்த மருந்து கொடுத்த கிராமங்களில் ஆடுகளின் இறப்பின் எண்ணிக்கை குறைந்துள்ளது எனக் கூறினார்கள். அதற்கு முன் மாதம் 4 அல்லது 5 ஆடுகள் இறக்கும் என்றும் மருந்து கொடுத்த பின் இந்த இரண்டு மாதத்தில் ஒரு ஆடு கூட இறக்கவில்லை என கூறியுள்ளார்கள். விருதுநகர் மாவட்டம் கலைஞர் நகர் சின்னமூப்பன்பட்டி பகுதியில் ஆடுகளுக்கு குட்டி போட்ட பின் 1 மாதத்திற்கு பின் ஆடுகளுக்கு அதிகமான இரத்தக் கழிச்சலாக இருந்தது. அதற்கு மருந்தாக துத்தி இலை, ஆவாரம்பூ இலை, சீரகம் இவற்றை அரைத்து 1/2 லிட்டர் தண்ணீரில் கலந்து கொடுக்க சரியானது என்று பயிற்சி எடுத்தவர்கள் கூறினார்கள்.

வி. ஜெயபால், வேல்டு விசன் இந்தியா,
2/718, வி.ஓ.சி நகர்
குருவப்பன் எல்.ஐ.சி ஏஜன்டு வீடு மாடி
சூலக்கரைமேடு
விருதுநகர் மாவட்டம்
செல் – 9952100833

அண்ணாமலையின் கால்நடை வைத்யம்

சேலம் மாவட்டம், ஏற்காடு தாலுகா மஞ்ச குட்டையில் வசிக்கும் அண்ணாமலையின் கால்நடை வைத்யம் பின்வருமாறு .

மாடு மடிவீக்கத்திற்கு

பாறை கிழங்கு, நல்லெண்ணெய், மஞ்சள் பொடி, வெள்ளை பூண்டு (4 பல்) நான்கையும் நன்கு சேர்த்து பசை செய்து தினமும் மாலையில் மாட்டின் மடுவில் தேய்த்து வந்தால் 3 நாட்களில் மடி வீக்கம் குறைந்து விடும்.

மாடு தீவனம் எடுக்காமல் இருந்தால்

பூண்டு (4 பல்), மிளகு 4, சீனி மிளகாய் இலை கைபிடி, பனை வெல்லம், இந்நான்கையும் ஒன்றாக அரைத்து மாட்டின் நாக்கில் தேய்த்து உள்ளே கொடுத்து விட்டால் மாட்டிற்கு நல்ல பசி எடுத்து தீவனம் தின்னும். இவரிடம் 4 சிந்து மாடுகள் உள்ளன. மாடுகள் நித்தம் மேய்ச்சலுக்கு செல்லுவதால் வேறு எந்த நோயும் வராது என கூறுகிறார்.

மாடுகள் சினைபிடிக்க

கர்நாடக சிர்சி ஊரிற்கருகே எங்கள் வீட்டில் பாரம்பரியமாக நாட்டு மாடுகளை பராமரித்து வருகிறோம். என்னுடைய மனைவியின் சொந்த ஊர் பகுதியில் பின்பற்றப்படும் பாரம்பரிய வைத்ய முறையை கடைபிடிப்பதால் மாடுகளில் சினைபிடிக்காத பிரச்சனை ஏற்படுவதில்லை.

பூதகும்ளகாய் எனப்படும் வெண்பூசணியை இரண்டாக அறுத்து ஒரு பாதியை மட்டும் வியாழக்கிழமை அன்று தேங்காய், முளைகட்டிய உளுந்துடன் சேர்த்துக் கொடுப்போம். பூசணியின் மறுபாதியை ஞாயிற்றுக்கிழமையில் முளைக்கட்டிய உளுந்து, தேங்காய் (துருவல்) சேர்த்து தர வேண்டும். இங்ஙனம் இரு முறை மட்டும் கொடுத்தால் போதுமானது. பின்னர் மாடு ஹீட்டுக்கு வந்துவிடும். உடனே சினைக்கு போடுவோம். ஒவ்வொரு தடவையும் பாதி பூசணிக்காயுடன் முளைகட்டிய உளுந்து 1கிலோ, தேங்காய் ஒரு முடி துருவல் சேர்த்து தருகிறோம்.

இராமச்சந்திர பட்
தேவகுடலு, சிர்சி தாலுகா
உத்ரகன்னடா மாவட்டம், கர்நாடகா
செல் ; 9845912084

இயற்கை காய்கறி விற்பனை

என்னுடைய பெயர் வேலுச்சாமி. திருப்பூர் மாவட்டம், தண்டுக்காரம் பாளையத்தில் விவசாயம் செய்து வருகிறேன். 10 ஆம் வகுப்பு வரை படித்து சிறிது காலம் வெளியூர் சென்று எலக்ட்ரிசியனாக வேலை பார்த்து ஊருக்கு திரும்பி விட்டேன். பிறகு தனியாக வீடு மற்றும் கம்பெனி எலக்ட்ரிக்கல் , பிளம்பர் காண்டிராக்ட் எடுத்து 1 வருடம் தனி நபராக வேலை செய்தேன் பிறகு பல நபர்களை வேலையில் அமர்த்தி வேலைகள் செய்து வந்தோம். தந்தை காலம்மான பின் 81/2 ஏக்கர் நிலம் முழுவதையும் சொட்டு நீர் பாசனம் அமைத்தேன். 81/2 ஏக்கர் நிலத்தில் மொத்தமாக கரும்பு சாகுபிடிக்கு தயார் செய்து நடவு செய்தேன். விவசாயம், எலக்டிரிசியன் இரண்டையும் சேர்த்து பார்த்து வந்தேன். பிறகு எலக்டிரிக்கல் தொழிலை கொஞ்சம் கொஞ்சமாக குறைத்து எனக்கு கீழ் பணி புரிந்தவர்களிடம் தொழிலை ஒப்படைத்து விட்டேன்.

கரும்பு பயிரில் 2 வது மாதம் களை அதிகரித்ததால் பிடாமெட்டிரிக் பார்ட்டி என்னும் களை கொள்ளி விசத்தை தெளித்தேன். 8 ஏக்கர் ஒரு நாளில் அடிக்க முடியாதலால் முதல் நாளில் 2 ஏக்கர் மட்டும் அடிக்க முடிந்தது. இரண்டாவது நாளில் இரண்டு ஏக்கர் களைகொள்ளி தெளித்த பகுதி கரும்பு பயிர் அதிக வாட்டமாக தெரிந்ததால் களை கொள்ளி தெளிப்பதை நிறுத்தி விட்டேன். மற்ற 61/2 ஏக்கர் பகுதியை கை களை எடுத்தேன். இந்த வருடம் இரசாயன மற்ற உரங்கள் பயன்படுத்தி கரும்பு மொத்தம் 520 டன் கரும்பு எடுத்து பன்னாரி அம்மன் சுகர்ஸ் நிறுவனத்திற்கு கொடுத்தேன்.

இரண்டாவது வருடம் கரும்பு சோகைகளை அப்புறபடுத்தி வேப்பம்புண்ணாக்கு , கடலை புண்ணாக்கு, ஆமணக்கு புண்ணாக்கு பயன்படுத்தி பார் மாற்றி போட்டேன். அப்போது கொடிசியாவில் அக்ரி, எக்ஸ்போ நடந்தது. அங்கு சென்று பார்வையிடும்போது பயோ சக்சஸ் என்ற நிறுவனம் அறிமுகம் ஆனது. இயற்கை விவசாயத்திற்கு ஏற்ற தொழில்நுட்பம் என்று கூறியதால் அந்த நிறுவன பொருட்கள் வாங்கி உபயோகப்படுத்தினேன். 6 மாதங்கள் 7 மாதங்கள் என்ற போதே செலவு 11/2 லட்சங்கள் தாண்டியது. அந்த காலகட்டத்தில் பசுமை விகடன் வாயிலாக நம்மாழ்வார் ஐயா அவர்களின்

கட்டுரைகள் படிக்க நேர்ந்தது. அருகில் அருகில் உள்ள ஊர்களில் உள்ள விவசாயிகள் பயோ உரங்களினால் நட்டம் ஏற்பட்டதைப் பார்த்து பயோ உரங்கள் வேண்டாம் என்ற முடிவிற்கு வந்தேன். ஆனால் இந்த வருடம் 470 டன்கள் மட்டுமே எடுக்க முடிந்தது. பிறகு அடுத்த மூன்றாம் கட்டையில் இயற்கை உரங்களை மட்டுமே பயன்படுத்தி 390 டன் எடுக்க முடிந்தது. காரணம் தண்ணீர் பற்றாக்குறை. கரும்பு வெட்டும் நண்பர்களின் தூண்டுதலால் 1/2 ஏக்கர் பந்தல் போட்டேன். 1/2 ஏக்கரில் பீர்க்கன், பாகல், புடலை என இயற்கை முறையில் மூன்று காய்களும் பயிரிட்டேன். ரூ. 80,000 செலவு செய்து ரூ. 1,20,000 வருமானம் எடுத்தேன். ஒரு போகத்தில் இந்த பயிர் செய்யும் போது பொதிகை தொலைகாட்சி நிறுவனம் வந்து பேட்டி எடுத்து சென்றார்கள். பிறகு இந்த வருடம் எனக்கு திருமணம் நடந்தது.

இயற்கை முறையில் சாகுபடி செய்து திருப்பூர் வையகம் இயற்கை அங்காடிக்கு முதல் முதலில் காய்கறிகள் கொடுத்தேன். பிறகு மீதம் இருந்த காய்கள் அருகில் உள்ள கோவிலில் கடை போட்டு விற்பனை செய்தேன். இயற்கை முறையில் விழைவித்த காய்கள் என்ற பேனர் வைத்ததால் நல்ல வரவேற்ப்பு இருந்தது. பிறகு பொதிகை நிகழ்ச்சி பார்த்து கோவை ஸ்ரீவத்ஸா மற்றும் சுகம் இயற்கை அங்காடி மூன்று கடைகள் எடுக்க ஆரம்பித்தார்கள். இந்த சமயத்தில் அருகில் ஒரு பண்ணையில் இயற்கை விவசாய கருத்தரங்கு நடைபெற்றது. அதில் கலந்து கொண்டதால் சுந்தரராமன் ஐயா மற்றும் பல விவசாயிகளின் நட்பு கிடைத்தது. அன்று முதல் ஐயா அவர்களின் அறிவுருத்தல் படி சாகுபடி செய்ய ஆரம்பித்தேன். அப்படியே சமூக வேலைகளிலும் ஈடுபாடு சென்றது. மற்ற விவசாயிகளிடம் உள்ள காய்கறிகளையும் எடுத்து விற்பனை செய்து கொடுத்தேன். விவசாயிகள் தனிதனியாக செய்து வந்ததை ஒழுங்கு படுத்தினோம். ஒரு கூட்டமைப்பை உருவாக்கினோம். பசுமை பேராயம் என்ற பெயரில் தண்டுக்காரம்பாளையம் தலைமை இடமாக கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. தனியாக இருந்தே வியாபாரம் சங்கத்தில் இருந்து செல்லுமாறு சென்னை, கேரளா, கோவை, ஊட்டி, ஈரோடு என்று விரிவடைந்தது. விவசாயிகள் 30 நபர்கள், அங்காடிகள் 20 என அதிகரித்தன. வேலைக்கு 1 ஆள் நியமித்து அலுவலகம் ஒன்றை நிறுவினோம். அது வரையில் நாங்களே எங்கள் வேலைகளை பார்த்து வந்தோம். காய்கறிகள் உற்பத்தி அதிகரித்தது. நிறுவனமும் வளர்ச்சி அடைந்தது. நானும் சமூக ஈடுபாடு அதிகரித்ததாள். சீமை கருவேல மரங்கள் அகற்றுதல், விழிப்புணவு, கருத்தரங்கம், குளம் தூர் வார்தல், பனைவிதை நடவு செய்தல் என்று எங்கள் ஊரில் ஒரு முன்னேற்ற பணிகள் செய்தோம். அந்த கால கட்டத்தில், அவிநாசி அத்திக்டவு போராட்டம் நடைபெற்றது. அந்த கோராட்டத்தில் நானும் அங்கு பங்கு பெற்று உண்ணாவிரதம் இருந்த தோழர்களுக்கு மருத்துவ உதவி செய்து வந்தேன். குழுவில் அங்கு போக கூடாது என்று கூறியதால் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பசுமை பேராயத்திற்கு செல்லவில்லை. எனது துணை தலைவர் பதவியையும் ராஜினாம செய்தேன்.

பிறகு தோட்டத்திலும் தண்ணீர் இல்லாததால் 2016 பு.புளியம்பட்டியில் மானாவரி நிலத்தை 5 வருட ஒப்பந்தத்தில் தோட்டம் பிடித்து சொட்டு நீர் பாசனம் அமைத்து விவசாயம் செய்ய ஆரம்பித்தேன். அனைத்து காய்கறிகளும் பயிர் செய்தேன். பிறகு ஐயா அவர்களின் அறிவுருத்தல்படி பசுமையில் இருந்து பிரித்து வந்த சில நண்பர்கள் மற்றும் புதிய நண்பர்களுடன் ''ஐந்திணை நேச்சுரல் பார்மர்ஸ்'' என்ற புதிய அமைப்பை உருவாக்கினோம். ஆறு விவசாயிகளுடன் ஆரம்பித்து 3 அங்காடிகளுக்கு மட்டும் காய்கறிகளை நானும் என் மனைவியும் இணைந்து எடுத்து அனுப்பி வைத்தோம். வாரம் ஒரு முறை அனைவரும் சந்தித்து கொள்வோம்.

விவசாயிகள் நலன் மட்டும் குறிக்கோளாக கொண்டு எந்த உறுப்பினர்களிடம் சந்தாவோ, நுழைவு கட்டணமோ வாங்க கூடாது என்று முடிவு செய்தோம். முதல் வருட இறுதியில் 12 லட்சம் ரூபாய் என்ற நிலையில் தொடங்கியது இரண்டாம் ஆண்டு தொடக்கத்தில் விவசாயிகள் 30 அங்காடிகள் 20 என அதிகரித்தன. அலுவலகமாக தோட்டத்திலேயே வீட்டின் ஒரு பகுதியை மாற்றினோம். வேலைக்கு 4 பேர் அமர்த்தினோம். இரண்டாம் ஆண்டு தொடக்கத்தில் கம்பியூட்டர் பில் அறிமுகம் செய்தோம். மாத வருமானம் 4 லட்சங்கள் என்று உயர்ந்தது. விவசாயிகளுக்கு பண்ணைக்கு சென்று சில தொழில் நுட்பங்கள் சொல்லி கொடுத்தோம்.

சிறிய அளவில் எடுத்து வந்த காய்களில் விவசாயிகளிடம் இருந்து பாதிக்கு மேல் எடுத்து விற்பனை செய்து கொடுக்கும் நிலைக்கு உயர்தோம். விவசாயிகளுக்கு மாதம் ஒரு முறை பணம் பட்டுவாடா செய்து வந்தோம். நிறுவன வளர்ச்சிக்கு விவசாயிகளிடம் இருந்து வரும் காய்களுக்கு 1 கிலோ ஒற்றிற்கு ரூ. 2 என்று எடுத்து கொண்டு ஆள் சம்பளம் பெட்ரோல் செலவு பேக்கிங் செலவுக்கு மட்டும் எடுத்தோம். இதில் மீதம் உள்ள பணத்தில் நிறுவனத்தில் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு உபயோகப் படுத்தினோம். விவசாயிகளுக்கு தனி புத்தகம். அங்காடிகளுக்கு தனி பில் புக் என்ற நிலை இரண்டாம் ஆண்டிலும் பிறகு கணணி மற்றும் அறிவியல் தொழில் நுட்ப உதவியுடன் விவசாயிகளுக்கு குறுத்தகவல் வாயிலாக அவர்கள் அனுப்பும் காய்கறிகள் எடை விலை சென்று சேரும் வகையில் வடிவமைத்தோம். பிறகு 15 நாட்களுக்கு ஒரு முறை பணம் அவரவர் வங்கி கணக்கில் சென்று சேருமாறு செய்தோம். மூன்றாம் ஆண்டு 6 மாத இறுதியில் மாத வருமானம் 7 லட்சம் ரூபாயை தாண்டியது. விவசாய வல்லுனர் காய்கறி விற்பனை ஒரு வரை நியமித்து விவசாயிகளுக்கு சில வழிகாட்டுதல்கள் செய்வோம்.

இரண்டாம் ஆண்டு இறுதியில் அலுவலகத்தை பண்ணையிலேயே விரிவுபடுத்தினோம். அலுவலக ஊழியர்கள் எண்ணிக்கை 8 பேர் ஆக அதிகரித்தன. பேக்கிங் செய்ய இருவர், கம்புயூட்டர் பில் போட , மார்கெட்டிங் செய்ய இருவர், பண்ணை ஆய்வு செய்ய ஒருவர், ட்ரன்ஸ்போர்ட், அங்காடிகள் பார்வையிட ஒருவர், மேற்பார்வை செய்ய ஒருவர் என நிறுவனம் வளர்ச்சியை எட்டியுள்ளது.

தற்போது மூன்றாம் ஆண்டு தொடக்கத்தில் விவசாயிகள் எண்ணிக்கை 70 ஐ தாண்டியுள்ளது. அங்காடிகள் எண்ணிக்கை 50 ஐ தாண்டியுள்ளது. தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரி, மஹாராஷ்டிரா, ஆந்திரா என விவசாயிகளும் அங்காடிகளும் பெருகியுள்ளது. தற்போது காய்கறிகள் மாதம் விற்பனை ரூ.14 லட்சங்கள் தாண்டியுள்ளோம். இந்த வளர்ச்சிக்கு முதல் காரணம் விவசாயிகள் முழு ஒத்துழைப்பு, எந்த ஒழிவு மறையும் இல்லாமல் விவசாயிகளுக்கு கிடைக்கும் விலை அங்காடிகளுக்கும் அங்காடிகளுக்கு அனுப்பும் விலை விவசாயிகளுக்கும் தெரிவித்து செயல்படுத்துவது தான் முக்கிய காரணம். இந்த நிறுவனத்தை நானும் என்னுடன் எனது மனைவி இருவரும் மேற்பார்வை இட்டு வருகிறோம். எங்கள் நோக்கம். தற்போதைய நிலை ஒரு புறம் உற்பத்தி உள்ளது. ஒரு புறம் தேவை உள்ளது. இவர்கள் இருவரையும் இணைத்து பூர்த்தி அடைய வைப்பதே ஐந்தினை நேச்சுரல் பார்மர் குழுவின் நோக்கம். இடையில் நேரம் கிடைக்கும் போது விழிப்புணர்வு. கருத்தரங்கம். மீதம் உள்ள காய்கறிகளை ஆதரவற்ற அனாதை குழந்தைகள் பள்ளிகளுக்கு அனுப்பி வைப்பது என்று எங்கள் பணி சென்று கொண்டு உள்ளது.

வேலுச்சாமி
நா. வெங்கடாசலம்
தண்டுக்காரம் பாளையம் அஞ்சல்
சோலையூர்வழி , அவிநாசி தாலுகா
திருப்பூர் மாவட்டம் – 641655

நிலத்தடி நீர் ஆய்வு அனுபவம்



கடந்த 23 ஆண்டுகளாக 1500 இடங்களில் நிலத்தடி நீரை ஆய்வு செய்துள்ளேன். இதில் 200 இடங்களுக்கு மேலாக கிராம குடி நீர் கிடைக்கும் இடங்களை தேர்வு செய்து கூறியுள்ளேன். நான் ஆய்வு செய்து கூறிய இடங்களில் போர் போடும் இடங்களில் 100க்கு 80 இடங்களில் நல்ல நீர் ஊற்று கிடைத்துள்ளது. நிலத்தடிநீரை ஆய்வு செய்ய ஒரு தேங்காயை உள்ளங்கையில் எடுத்து சோதனை செய்யும் இடத்தில் நடந்து செல்வேன். நிலத்தடி நீர் இருந்தால் தேங்காய் நகரும். நிலத்தடி நீர் இல்லையென்றால் தேங்காய் நகராது. இயற்கையாகவே ஒரு சில நபர்களுக்கு அமைந்துள்ள மனித சக்திக்கும் பூமிக்குள் மறைந்துள்ள நில நீர் ஊற்றுகளுக்கும் ஒரு நெருங்கிய தொடர்பு உண்டு. அதுபோல இயற்கை சக்தி என் உடலிலும் உள்ளது. நான் எனது சக்தியை முறையாக பயன்படுத்தி

நிலத்தடி நீர் ஆய்வில் ஈடுபடும் போது என் உள்மனது குறிப்பிடும் இடத்தில் நான் நின்றால் எனது கண்கள் செல்லும் திசையில் நிலத்தடிநீர் ஊற்று நிறைந்து இருந்தால் என் கைகளில் உள்ள பொருள்கள் இயங்கும். இதை அறிவியல் பூர்வமாக ஆய்வு செய்ய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் அவர்கள் செயற்பொறியாளர், பொதுபணி துறை, நிலநீர் கோட்டம், திருச்சிராபள்ளிக்கு அனுபி வைத்தார். அவர்களும் வந்து எனது முறையை ஆய்வு செய்தனர். ஆய்வு செய்த அறிக்கை 3 ஆண்டுகள் ஆகியும் எனக்கு கிடைக்கவில்லை.

17.11.2012 அன்று ஒரு சம்பவம் நடந்தது. உப்பிலியாபுரம் ஒன்றியம் தளுகை பஞ்சாயத்து டி. பாதர்பேட்டை கிராமத்தில் அருந்ததியர் காலணியில் மெக்கர் வைத்து 485 அடி ஆழ்குழாய் போர் போட்டார்கள். போட்டும் தண்ணீர் இல்லை. தற்செயலாக அங்கு சென்றிருந்தேன். ஊர்காரர்கள் போர் போட்டும் தண்ணீர் வரவில்லையை என்று கூறினார்கள். பக்கத்தில் ஓர் அம்மன் கோவில் இருந்தது. என் பையிலிருந்த ரூ. 102 எடுத்து அம்மன் கோவில் உண்டியலில் போட சொன்னேன். அவர்களும் உண்டியலில் பணம் போட்டு விட்டு திருநீறு கொடுத்தார்கள். சில நிமிடங்களில் போர் குழாயிலிருந்து தண்ணீர் குபு குபு என்று பெருகி வந்தது. அனைவருக்கும் ஆச்சிரியத்தையும் மகிழ்ச்சியையும் கொடுத்தது. இந்த நீரை எடுத்து சாமிக்கு அபிஷேகம் செய்தார்கள். குடி நீர் இல்லாத கிராமத்திற்கு நீர் வந்ததை மக்கள் மறக்க மாட்டார்கள்.

ஆ. கந்தசாமி
உழவன் நில நீர் ஆய்வகம்
நெட்டுக் கொட்டகை, த. முருங்கப்பட்டி அஞ்சல்
துறையூர் வட்டம் , திருச்சி மாவட்டம் – 621012
செல் : 9944526809, 6374220450.

முன்கூட்டியே மழை பொழிவின் அளவை கணித்தல்

என் வயது 73. அஞ்சல் துறையில் பணி மாற்றி ஓய்வு பெற்றவன். நான் மழை, பொழிவு பற்றி முன்கூட்டியே கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக தெரிவித்து வருகிறேன். அதுவும் தமிழக முதல்வருக்கு எழுதி அதன் நகலை வானிலை ஆய்வு மையம், விவசாய பல்கலைகழகம் கோயம்புத்தூருக்கு அனுப்பி வைக்கிறேன்.

''மழை பெய்வதும் பிள்ளை பிறப்பதும் மகா தேவனுக்கு கூட தெரியாது'' என்பார்கள். ஆனால் அந்த மகா தேவன் முன் கூட்டி என்ன நிகழ வேண்டும் என்பதை எழுதி வைத்து பின்னர் நிகழ்த்திக் காட்டுகிறான். இதுதான் நடக்கும் உண்மை.

எனது தந்தை ஆனி, ஆவணி மாதங்களில் குறிப்பிட்ட நாட்களை கவனிப்பார். அன்று ஒரு சில துளியாவது மழை பெய்வது தென்பட்டால் இந்த வருடம் மழை இருக்கும் என்பார். அவ்வாறே மழை பெய்யும். அவருக்கு அந்த அறிகுறி தெரியவில்லை என்றால் மழை குறைவு என்பார். சில நேரங்களில் கனவில் வந்ததை தெரிந்து மழை வருவதை முன் கூட்டியே சொல்வார். அவர் கடின உழைப்பாளி. ஏமாற்றுதல், பொய் சொல்வது, குறை கூறுவது பிடிக்காது. அதே கொள்கையை நானும் கடைபிடித்து வருகிறேன்.

கைலாசனதர் சதகம் புத்தகத்தில் ஒரு பாடல் படித்த போதும் மார்கழி இரண்டினில் கர்போட்டம் ஓடில் பஞ்சம்மது நீங்கி உலகில் என்று ஆரம்பம் ஆகும். கர்போட்டம் என்பது வானில் மேகங்கள் திரண்டு ஒரிண்டு துளியாவது தலையில் விழும். அதேபோல் சூரியனை சுற்றி பரிவட்டம் தென்படும் அல்லது ஜோதிட சாஸ்த்திரத்தில் மார்கழி மாதம் சூரியன் பூராட நட்சத்திரத்தில் பயணிக்கும் போது சில அறிகுறிகள் தென்படும். பரி வட்டம் தெரிதல், அடுத்த 7 வது மாதம் அதாவது ஆனி மாதம் முதல் மழை பொழிவு எப்படி இருக்கும் என்பதை கணித்து சொல்லிவிடலாம்.

இதைத்தான் கோளறிஞர் ராமசந்திரன் பின்பற்றி முன் கூட்டியே தெரிவிக்கிறார்.நான் ஆழ்ந்த உறக்கத்தில் கனவில் தெரிவதை கொண்டு ஆய்வு செய்து வருகிறேன். வானிநிலை ஆய்வு மையங்கள் காற்றின் அழுத்தம், ஈரப்பதம், வீசும் வேகம் இவற்றினை கணக்கில் எடுத்து கொண்டு ஆய்வு செய்து தெரிவிக்கிறார்கள். எது எப்படி இருப்பினும், முன்கூட்டியே மழை பொழிவு தெரிந்தால் அதற்கு ஏற்றாற்போல் விவசாயத்தினை திட்டமிடுதல், குடிநிர் பிரச்சனை தீர்வு காணல் , ஏரி, குளம், டேம் தூர்வாருதல் போன்ற பணிகளை உரிய காலத்தில்

செய்ய ஏதுவாக இருக்கும். கோளறிஞர் ராமச்சந்திரன் சொல்வதுபோல் இதை ஒரு கணித முறையில் ஆய்வு செய்தலே போதும். இது மட்டுமல்ல, உலகில் நடக்கும் எல்லா நிகழ்வுகளும் முன்கூட்டியே முடிவு செய்து பின்னர் இயற்கை அல்லது நமக்கு அப்பாற்பட்ட சக்தி நடத்துகிறது என்றால் அது மிகையாகாது. எனவே நல்வழியில் நடந்தால் இறைவன் நமக்கு துணை நிற்பார்.

பெரியசாமி
அஞ்சலக கண்காணிப்பாளர் (ஓய்வு)
எண் : 289 கிழக்குத் தெரு, மண்மிகு கிராமம்
வடக்கந்தல் – 606207, விழுப்புரம் மாவட்டம்
செல் : 9994215819

மூலிகை மசால் உருண்டை அனுபவம்

புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி மற்றும் ஆவுடையார்கோயில் வட்டத்தில் உள்ள கடலோர பகுதியிலுள்ள 14 ஊராட்சிகளில் தலா மூன்று பெண் உறுப்பினர்களை சமுதாய கால்நடை பராமரிப்பு தன்னார்வளராக தேர்வு செய்து 42 உறுப்பினர்களுக்கு ஆடு வளர்ப்பு மற்றும் கால்நடை மூலிகை வைத்திய பயிற்சி செப்டம்பர் 2018 லிருந்து 16 நாட்கள் பயிற்சி நடைபெறுகிறது. அவர்களுக்கு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முகமையின் சுனாமிக்கு பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்ட (IFAD PTSLP) உதவியுடன் மதுரை சேவா சங்கம் மூலம் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. இப் பயிற்சியின் ஒரு பகுதியாக திட்ட கிராமங்கள் தோறும் கால்நடை மருத்துவ முகாம் நடத்தப்பட்டு ஆடுகளுக்கு மூலிகை மசால் உருண்டை கொடுக்கப்படுகிறது. அவ்வாறு மணமேல்குடி தாலுகா நாட்டாணிபுரசகுடியிலும் ஆடுகளுக்கு மூலிகை மசால் உருண்டை கொடுக்கப்பட்டது பற்றி வித்யாமேரி பகிர்ந்து கொண்டார். ஆடுகள் கறிக்காக விற்பனை செய்ததில் ஆட்டை அறுத்து குடலை சுத்தப்படுத்தும் போது மசால் உருண்டை கொடுக்கப்பட்ட ஆட்டின் கறி கூடுதலாகவும் குடலில் ஒரு புழு கூட இல்லை. ஆனால் அதே சமயத்தில் மூலிகை மசால் உருண்டை கொடுக்காத ஆடு குடலில் எண்ணற்ற புழுக்களும்,கறி எடை குறைவாகவும் காணப்பட்டது.

வித்யாமேரி
பாதரக்குடி, இடையலூர் அஞ்சல்
பொன்பேத்தி வழி, புதுக்கோட்டை மாவட்டம்
செல் – 8489779582, பின் கோடு – 614629

கால்நடைகளில் கழிச்சலுக்கு

எங்கள் ஊரில் ஆடு, மாடு கழிச்சல் வந்தால் எங்கள் ஊரிற்கு எல்லையிலுள்ள தரிசு காட்டில் ஒடமரம், ஆவாரம், போன்ற செடிகளில் படர்ந்திருக்கும் ‘‘வேரில்லா கொத்தான்’’ (Cuscuta reflexa)என்ற செடியை பறித்து வந்து அரைத்து உள்ளே கொடுக்க வேண்டும். மாடுகளுக்கு இரு கைப்பிடி அளவு தழையும் ஆடு, கன்றுகளுக்கு ஒரு கைப்பிடி தழையைப் பயன்படுத்தலாம்.

அஞ்சம்மாள்
த/பெ. பி. நாகமுத்து
கூடலூர், இடையலூர் அஞ்சல்
பொன்பேத்தி வழி, புதுக்கோட்டை மாவட்டம்
பின் கோடு – 614629, செல் – 9659055219

நோயை விரட்டும் மூலிகைசக்தி

சித்தர்கள் கூறும் வழக்கம் இன்றும் பேசப்படுகிறது. ‘‘மண்ணில் வேந்தன்: மலையில் முனிவன் ; உண்ணும் சோற்றுக்கு ருசியானவன்; கண்ணில் மூக்கில் காதில் பிழிந்திட விண்ணில் போன உயிர் மீண்டும் திரும்புமே’’. (மண்ணில் வேந்தன் – வெற்றிலை, மலையில் முனிவன் – மிளகு, உண்ணும் சோற்றுக்கு ருசியானவன் – உப்பு இந்த மூன்றையும் நசுக்கி கண், மூக்கில், காதில் பிழிந்துவிட விண்ணில்போன உயிரும் திரும்புமே).

பொன்னுச்சாமி , வைத்தியர்
அம்பிலிக்கை வழி, ஒட்டன்சத்திரம்
திண்டுக்கல் மாவட்டம்
செல்:7402558668

வெள்ளாடுகளுக்கு மசாலா மூலிகை உருண்டை

என்னுடைய பெயர் பளம் தினா திர்க்கே. நான் ஜார்கன்ட் மாநிலத்தில் கெடல்சுட் என்னும் கிராமத்தில் வசித்து வருகிறேன். இங்கு 100 குடும்பங்கள் உள்ளன. நான் நவம்பர் 2013 முதல் ARS SLPS மகளிர் திட்டத்தில் பசு பராமரிப்பு பணியாளராக பணியாற்றி வருகிறேன். என்னுடைய கிராமத்தில் உள்ள விவசாயிகள் அருகிலுள்ள ஜொன்கா ஊரில் நடக்கும் சந்தையில் தாங்கள் வளர்த்த ஆடுகளை குறைந்த விலையில் நஷ்டமடையும் வகையில்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு வாய் காணை நோய் கிராமம் முழுவதும் பரவியது. இதனால் ஏராளமான ஆடுகள் இறந்துவிட்டன. 146 ஆடுகளே எஞ்சியிருந்தன.

ஜீ.ஆர்.சி நிறுவனம் 2014 பிப்ரவரி மாதம் எங்கள் கிராமத்தில் 15 நாட்கள் மூலிகை வைத்திய பயிற்சி கொடுத்தனர். இதன் மூலம் 4 வருடங்களாக மூலிகை மருந்துகளை தயார் செய்து கொடுத்து வந்ததால் காணை நோய் வருவது தடுக்கப்பட்டது. இதன் மூலம் 146 ஆடுகள் இருந்த நிலையில் தற்போது 500 ஆடுகளாக பெருகியுள்ளன.

இந்த மூலிகை மசால் உருண்டையின் பயன்பாடு அணைத்து கிராம மக்களையும் மகிழ்ச்சியடைய செய்தது. இதனால் அவரவர்களே தங்களுக்கு தேவையானபோது மருந்துகளை தயாரித்துக் கொள்கின்றனர். தற்சமயம் நான் 26 கிலோ உள்ள ஆட்டை கிலோ ரூ.300 க்கு விற்கிறேன். இதனால் 26x300 = ரூ.7,800 ஒரு வருடத்தில் 6 ஆடுகளை விற்பனை செய்வதில் (7,800x6) ரூ.46,000– ரூ.50,000 வரை லாபம் கிடைக்கிறது.

பளம் தினா திர்க்கே
கெடல்சுட், ஜார்கன்ட்
செல் – 7295880503

மாட்டு உன்னிகளுக்கு பாடம் போடுதல்



கர்நாடகாவில் சிர்சி அருகே எங்கள் பனவாசி ஊரில் எல்லையில் பசவன்னா கோவில் உள்ளது. இந்த கோவிலில் நந்தியே மூலவர். எங்கள் வீட்டிலுள்ள கால்நடைகளுக்கு உன்னி வந்துவிட்டால் புது ஈஞ்சமாறு வாங்கி அதை வைத்து மாடுகளுக்கு மேல் தடவி விடுவோம். பின்னர் அந்த ஈஞ்ச மாறை பசவன்னா கோவிலுக்கு சென்று உள்ளே வைத்துவிடுவோம். சில நாட்களில் மாடுகளுக்கு உன்னி நீங்கி குணமாகும். இவ்வாறு உன்னிகளுக்காக நாங்கள் செய்யும் வேண்டுதலை வாரத்தில் வியாழன், ஞாயிறு கிழமைகளில் மட்டும் பன்னுவோம்.

மிருதுஞ்சையா, பனவா, சிசிர்சி தாலுகா
உத்தரகன்னடா மாவட்டம், கர்நாடகா மாநிலம்

பழங்கள் பறிக்கும் கருவி

பழத்தோட்டங்களில் பழங்கள் பறிக்க எளிய கை தொரட்டி உருவாக்கப்பட்டுள்ளது. இந்த தொரட்டியை உருவாக்கிய மஹாராஷ்ட்ர மாநிலம் இரத்தினகிரியை சேர்ந்த மாதேவ் ஸ்ரீ கிருஷ்ண மகஜன் என்பவருக்கு தேசிய கண்டுபிடிப்பு அறக்கட்டளையின் ஆறுதல் பரிசு 2007 ல் கிடைத்துள்ளது. இதன் மூலம் மா, கொய்யா, சப்போட்டா போன்ற பழங்களை எளிதில் அறுவடை செய்யலாம். இந்த தொரட்டியை வைத்து புளியங்குடி

அந்தோனிசாமி எலுமிச்சை பழங்களை பறிப்பதற்கு உபயோகப்படுத்தினார். எலுமிச்சையில் ஒரு கொத்தில் பல பழங்கள் வெவ்வேறு முதிர்ச்சி நிலைகளில் காணப்படும். தனித் தனியாக பறிப்பது சற்று கடினமாகும். இருப்பினும் ஒரு காய் மட்டும் தனியாக இருந்தால் பறிப்பது சுலபமாகும். ஒரு கருவியின் விலை ரூ. 250. ஜீ.எஸ்.டி. வரி தனி. அனுப்பும் செலவு தனி. இக்கருவிகள் கிடைக்கும் இடம்

Madhav Shrikrishna Mahajan
Maharashtra
Contact : 02358285224

கேரளா நாட்டு இன பசுமாடு வளர்ப்போர் சங்கம்

எங்கள் சங்கத்தில் 300 உறுப்பினர்கள் கேரளா மாநிலத்தில் உள்ளனர். ஒவ்வொரும் நுழைவு கட்டணமாக ரூ, 250 செலுத்த வேண்டும். வருடக்கூட்டம் நடத்தும் சமயம் சந்தா தொகை புதுப்பிக்கப்படுகிறது. எங்கள் சங்கத்தின் முயற்சியால் கேரளா கால்நடை வளர்ச்சி முகமையானது நாட்டு பசுக்கள் (வெச்சூர், காசர்கோட்) வளர்க்கும் விவசாயிகளுக்கு ஒரு தடவை மானியத் தொகையாக ரூ. 7500/– 2014ல் கொடுத்தனர். தற்பொழுது மானியத் தொகை ரூ. 10,000 மாகக் கொடுக்கப்படுகிறது. இதுவரை 300க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு ரூ. 10,000 வழங்கப்பட்டுள்ளன. எங்கள் சங்கத்தின் முயற்சியால் வெச்சூர், காசர்கோட், கிர் மாட்டு இன விந்துக்கள் கிராமப்புற கால்நடை மருத்துவ மையங்களில் கிடைத்து வருகின்றன. என்னிடம் செருவேளி 7 மாடுகள், குட்டம்புலா குள்ளன் 2 மாடுகள், கிர்பசு 1 உள்ளன. செருவேளி மாட்டு ரகத்தில் 3 காளைகள் இனப்பெருக்கத்திற்காகப் பயன்படுத்தி வருகிறோம். எங்கள் சங்கம் நாட்டுப்பசுக்கள் மூலம் பஞ்சகவ்யா, இயற்கை உரம் தயாரிக்க துவங்கியுள்ளோம்.

மோசன் வழயில்
தலைவர்
Kerala Local Cattle Breeders Society
Payappady Post,Puthuppally,
Kottayam District, Kerala - 686011
Cell - 9447068106

நடை பஜனைக்கு உதவும் மிருதங்கம்

கேரளா மாநிலம் பாலக்காட்டுக்கு அருகே குளல்மன்னம் அக்ரஹாரத்தில் ராமகிருஷ்ணன் (47 வயது) என்ற மிருதங்கம் வித்வான் வசித்து வருகிறார். இவருடைய குடும்பத்தில் கோவில்களில் மிருதங்கம் வாசிப்பதை குலத்தொழிலாக செய்து வருகின்றனர். இவர் பி.காம். வரை படித்து விட்டு இவர் தந்தையிடம் இருந்து மிருதங்கம் இசைப்பதை கற்றுக்கொண்டார். முறையாக மிருதங்கம் கற்றுக்கொள்ள 5 ஆண்டுகள் பிடித்தன. பள்ளி, கல்லூரிகளில் படிக்கும் சமயம் இசை, நாடக போட்டியில் பல பரிசுகள் பெற்றுள்ளார். இவருடைய மூதாதையர்கள் தமிழ் நாட்டிலிருந்து பல நூற்றாண்டுகளுக்கு முன் இடம் பெயர்ந்து பாலக்காட்டில் வசித்து வருகின்றனர்.

இவருடைய இசை ஆர்வத்தால் பல இசை கச்சேரிகளில் கலந்து கொண்டுள்ளார். 2009 ல் தொடர்ந்து 501 மணி நேரம் 21 நாட்களில் மிருதங்கத்தை இசைத்துள்ளார். இவருடைய திறமையை போற்றி லண்டனில்லுள்ள உலக ஆவண பல்கலைகழகம் 2015 ல் டாக்டர் பட்டம் அளித்துள்ளது.

கண்டுபிடிப்பு உருவான வரலாறு

சிறு வயதிலிருந்தே பல இசை கச்சேரி நிகழ்ச்சிகளுக்கு மிருதங்கத்தை கழுத்தில் மாட்டி சுமந்தே செல்லுவார். இதனுடைய எடை சுமார் 15 கிலோவாகும். இது மரத்தினால் ஆனது. இதனால் இவருக்கு உடம்பு வலி ஏற்பட்டு கச்சேரியில் மிருதங்கம் வாசிப்பது கஷ்டமாக இருக்கும். பல ஊர்களில் மைக் செட் இல்லாமல்

இருக்கும். இதனால் மிருதங்கம் ஒலியும் மக்களுக்கு சரியாக சேராமல் இருக்கும். இந்த கஷ்டங்களை பி.காம் படிக்கும் காலத்திலிருந்தே எண்ணி வந்தார். இதற்கு தீர்வு ஏற்பட மனதில் உறுதி கொண்டார். இதன்படி மிருதங்கத்தை எடையை குறைக்கவும் நடந்து கொண்டே மிருதங்கத்தை வாசிக்க எளிய வழியை கண்டறிய எண்ணம் கொண்டார். பல ஆண்டுகளுக்கு பின் புதிய எடை குறைவான மிருதங்கம் ஒன்றை வடிவமைத்தார். இது பைபர் மற்றும் ஸ்டீல் பிரேம் கொண்டு உருவானது. இதற்கு ''சத்மிருதங்கம்'' என்று பெயரிட்டார். இதனுடைய எடை வெறும் 5 கிலோ தான். இதனை எங்கும் எளிதில் எடுத்து செல்லாம். நடை பஜனையில், உஞ்சவிருத்தியில் நடந்து கொண்டே வாசிக்கலாம். இதனால் தோள்பட்டை வலி இருக்காது. பஜனை பாடும் சமயம் வெவ்வேறு ராக அளவு (சுருதி) க்கு ஏற்றவாறு வெவ்வேறு மிருதங்கத்தை பயன்படுத்தாமல் இந்த சத் மிருதங்கம் ஒன்றையே பயன்படுத்தி கொள்ளலாம். அதாவது சுருதிக்கு ஏற்ற வலப்புற மிருதங்கப்பகுதியை மட்டும் மாற்றி கொள்ளலாம். இடப்புற தொப்பி பகுதியை இந்த பிரேமில் திரும்ப பயன்படுத்தலாம். இதனால் போக்குவரத்து சமயம் கலைஞரின் லக்கேஜ் எடை கனிசமாக குறையும். இந்த சத்மிருதங்கத்தை பலர் கேட்டு வாங்க ஆர்வமாக உள்ளனர். இதை இவர் பதிவு உரிமை செய்துள்ளார். தற்பொழுது இதன் விலை ரூ. 15,000 மாக இருக்கும். ஆனால் அதிகமாக உற்பத்தி செய்யும் சமயம் விலை குறையும். இதை சாதாரண மக்கள் பயன்படுத்தி பயன் அடைந்தால் இவருடைய ஊருக்கு (குளல் மன்னம்) பெருமை சேர்க்கும். இதனால் குளல்மன்னம் ஊருக்கு உலகளவில் புகழ் சேரும் என்று எண்ணுகிறார்.

ஜி. ராமகிருஷ்ணன்
மிருதங்கம் கலைஞர்
குளல்மன்னம் அக்ரஹாரம் அஞ்சல், பாலக்காடு, கேரளா– 678702
செல் – 9447963738

வெற்றிலை ஊரணி இராமசாமியின் இயற்கை சூழல் பண்ணை

திரு. இராமசாமி (72) சிவகாசிக்கருகேயுள்ள வெற்றிலை ஊரணி கிராமத்தில் 8 வது வரை படித்து விட்டு 20 ஏக்கரில் விவசாயம் செய்து வருகிறார். விவசாயம் தவிர தறி வைத்து ரெடிமேட் துணிகள் விநியோகமும் செய்து வருகிறார். தனது 2 பெண் பிள்ளைகளுக்கும் திருமணமானபின் மகன் தறிகளை மேற்பார்வையிட்டு கோவையிலிருக்கிறார். தன்னுடைய வயதானகாலத்திலும் விவசாயத்தைக் கைவிடாமல் மரங்கள், பழமரங்கள், தென்னை, வாழை, காய்கறிகள் சாகுபடி செய்து வருகிறார்.

இவர் 7 ஆண்டுகளுக்கு முன் குமிழாமரம், தென்னை மரங்கள் வைக்க ஆரம்பித்தார். பின்னர் மலைவேம்பு, சந்தனம், பீநாரிமரம், சவுக்கு, தேக்கு வைத்துள்ளார். தற்சமயம் எலுமிச்சை, கொய்யா கன்றுகள் ஊன்றியுள்ளார். கத்தரி, வெங்காயம், மிளகாய் சாகுபடி துவங்கியுள்ளார்.

இந்த பண்ணையில் 3 கிணறுகளும் 1 ஆழ்குழாய் கிணறும் உள்ளன. கிணற்று நீர் பற்றாக்குறையினால் சொட்டு நீர் பாசனம் அமைத்துள்ளார். தற்சமயம் காட்டுக்குள் ஓடையில் செல்லும் மழைநீரை தடுத்து 2 ஏக்கரில் தேங்குமாறு (500 அடி நீளம், 200 அடி அகலம்) செய்ததினால் கிணற்றின் நீர் மட்டம் கூடியுள்ளது.

நீர் பற்றாக்குறைக்கு மூடாக்கு

வறட்சியினால் தென்னை மரங்கள் படாமல் இருக்கவும். தென்னை நீர்த்தேவையை குறைக்கவும் மரங்களைக் சுற்றி மூடாக்கு செய்கிறார். காய்ந்த மட்டைகள், தாவரகழிவுகளை வைத்து பரப்பியுள்ளார். இந்த மூடாக்கை நடப்பட்ட கொய்யா, எலுமிச்சைகளுக்கும் செய்ய முடிவு செய்துள்ளார்.

கொய்யாவை குழியில் நடாமல் பாத்தியில் நடுதல்

தனது தோட்டத்தில் அர்க்காகிரான், தாய்லாண்ட் பிங்க், லலித், (கூஜா கொய்யா), லக்னோ 49 போன்ற ரகங்களை சுமார் 2 அடி அகலம் 1 அடி உயரம் கொண்ட மேட்டு பாத்திகளை ஏற்படுத்தி நடவு செய்துள்ளார். குழி எடுத்து கன்றுகள் நடுவதை விட இதில் வளர்ச்சி கூடியுள்ளது.

வேஸ்ட் கம்போஸ்டர் கலந்து நீர் பாய்ச்சுதல்

பெங்களூரிலிருந்து வேஸ்ட்கம்போஸ்டர் (ரூ. 20க்கு) வாங்கி வந்து ஒரு டாங்கியில் 200 லிட்டர் நீர் நிரப்பி வெல்லம் 2 கிலோ சேர்த்து கலக்கி விடுகிறார். இதனை 7 நாட்கள் கழித்து பயன்படுத்தலாம். இதனால் நன்மை செய்யும் நுண்ணியிரிகள் பெருகி விடும். பின்னர் இந்த கரைசலிலிருந்து மீண்டும் மீண்டும் நாமே நுண்ணியிரிகளை பெருக்கிக் கொள்ளலாம். இந்து கரைசலை நீர் பாய்ச்சும் குழாய் மூலம் சொட்டு நீர் பாய்ச்சப்படும் குழாய்களை அடைகின்றது. பின்னர் தாவரத்தின் வேர்பகுதிக்கு சென்று விடும். இந்த கலவை தயார் செய்ய ஒவ்வொரு முறையும் பெங்களூருக்கு சென்று வேஸ்ட் கம்போஸ்ட்டர் வாங்க வேண்டிய அவசியமில்லை. அதற்கு பதில் இந்த கலவையிலிருந்து 20 லிட்டர் கரைசலை எடுத்து பின்னர் 200 லிட்டர் நீர், வெல்லம் 2 கிலோ சேர்த்து 7 நாட்கள் புளிக்க விட்டால் போதுமானது.

மண்புழு உர பயோகலவை

மண்புழு உரம் தயார் செய்து இத்துடன் அமிர்தக்கரைசல், பஞ்சகவ்யா, வேப்பம்பிண்ணாக்கு, அஸோஸ்பைரில்லம், சூடோமோனாஸ், டிரைக்கோடெர்மா கலந்து நீர் தெளித்து 2 நாட்கள் நிழலில் உலர விடுகிறார். பின்னர் இதை நட்ட பழ மரக்கன்றுகளுக்கு தலா 1 கிலோ வீதம் இடுகிறார். இதனால் வளர்ச்சி கூடுவதாகக் கூறுகிறார். இது தவிர மண்புழு உரத்தை தனியாக கேட்பவர்களுக்கு கிலோ ரூ. 6 க்கு விற்பனை செய்கிறார்.

மேட்டுப்பாத்தியில் கலப்பு பயிர்

பழ மரக்கன்றுகளான கொய்யா கன்றுகள் நடப்பட்ட மேட்டுப்பாத்தியில் வெங்காயம்,பாசிப்பயறு கலந்து நட்டுள்ளார். இரு பாத்திகளுக்கும் இடையே தக்கைப்பூடு விதைத்து பசுந்தாழ் உரச்செடி வளர்க்கிறார்.

அமிர்தக்கரைசல் சொட்டு நீர் பாசனம்

சொட்டுநீர் குழாய்களில் வேஸ்ட் கம்போஸ்ட் கரைசலும் இத்துடன் அமிர்தக்கரைசலும் கலந்து செல்ல திருகு கைப்பிடி அமைத்துள்ளார். தேவையானபோது திறந்து விட மேற்படி கரைசல்கள் பாய்ச்சப்படும் நீர் குழாயில் கலந்து செல்லும். தற்சமயம் சொந்தமாக மினி டிராக்டர் வைத்துள்ளார். பண்ணை மேற்பார்வைக்கு 2 நபர்கள் நித்தம் வேலை பார்த்து வருகின்றனர். வருடத்திற்கு தோட்டப்பராமரிப்பு செலவு ரூ. 2 லட்சம் செலவானாலும் மண்புழு விற்பனை, தென்னங்காய் விற்பனைகளால் செலவை ஈடுகட்டுகிறார். கொய்யா, எலுமிச்சை பலனுக்கு வரும் சமயம் நல்ல வருமானம் வரும் என்று எதிர்பார்க்கிறார்.

ஏ. இராமசாமி
645, ஞானகிரி ரோடு
சிவகாசி – 626189
செல் – 9443350649

வாசகர் வட்டம்

மாடியில் மூலிகை, காய்கறி, பூந்தோட்டம்

சிறுவயதில் இருந்தே தோட்டக்கலையின் நுணுக்கங்களை என் குடும்பத்தினரிடமிருந்து கற்று கொண்டேன். நான் சென்னையில் ஒரு பாரம்பரிய சித்த வைத்தியரான திரு. நெல்லை நாயகம் அய்யாவிடமிருந்து சித்த மருத்துவம் மற்றும் ஆயுர் வேத மருத்துவத்தில் பயன்படும் மூலிகைகள் பற்றி

தெரிந்து கொண்டேன். அதன்படி ''குணபாடம்'' என்னும் மூலிகை அகராதியில் கூறப்பட்டுள்ள மூலிகைகளை எங்கள் வீட்டுத்தோட்டம் மற்றும் மாடித்தோட்டத்தில் வைத்து பராமரிக்க ஆரம்பித்தேன். எங்கள் தோட்டத்தை நான்கு பகுதியாக பிரித்து 1. காய்கறிகள் 2. கீரைகள் 3. பூக்கள். 4 மூலிகைகள் என பராமரித்து வருகிறேன். அவ்வகையில் ஆடிப்பட்டம் மற்றும் தைப்பட்டத்தில் காய்கறிகளை வளர்க்கிறேன். தற்போது என்னிடம் 10 வகையான வெண்டைக்காய், 50 வகையான கத்தரி, 12 வகையான மிளகாய், 6 வகை அவரை, 8 வகையான சுரை, 4 வகை தக்காளி, நாட்டு ரகங்கள் உள்ளன. இதைத்தவிர சேப்பங்கிழங்கு, சர்க்கரை வள்ளி, பிடி கருணை, சட்டிக்கருணை, காய்வள்ளிக்கிழங்கு, வெற்றிலைவள்ளிகிழங்கு, காட்டுக்கருணை என கிழங்கு வகைகள், மிதிபாகல், பன்னீர்பாகல், அதலைக்காய், பீர்க்கு, முருங்கை, துவரை என பல வகைகள் உள்ளன. கீரை வகைகளில் சக்ரவத்தி கீரை, சிவப்பு சிறு கீரை போன்ற 22 வகை உள்ளன. பூச்செடியில் மனோரஞ்சிதம், கொடிசம்பங்கி, நிலச்சம்பங்கி, சந்தன முல்லை போன்று 18 வகைகள். மூலிகை தாவரங்களில் என்னுடைய ஆர்வத்தினால் தற்போது 300 வகைகள் உள்ளன. மூலிகைகளில் பயன்பாடு பிரித்து பராமரித்து வருகிறேன். அதாவது சிறு நீரகத்திற்கானவை, மூளைக்கானவை, எலும்புக்கு வலுவூட்டுபவை என பிரித்து சேகரித்து வருகிறேன். இதைத்தவிர தாவரவியல் படித்து வருகிறேன். ஒரே குடும்பத்தை சார்ந்த மூலிகைகளை சேகரித்து வருகிறேன். அந்த வகையில் தூதுவளை, வெண்தூதுவளை, வெண்ஊமத்தை, கருஊமத்தை, பொன்ஊமத்தை, சிறியாநங்கை, பெரியாநங்கை, முள்ளைநங்கை, நாவல், வெண்நாவல், திப்பிலி, சிறு திப்பிலி, ஆனைத்திப்பிலி, கட்டுக்கொடி, சிறுகட்டுச்செடி, சிற்றரத்கை, பேரரத்தை, வெற்றிலை 3 வகை. சிறுகுறிஞ்சான், பெருங்குறிஞ்சான், சதுரப்பிரண்டை, உருட்டுபிரண்டை, இலைப்பிரண்டை என ஒவ்வொரு மூலிகையின் பல இரகங்களை தேடி பயிரிட்டு வருகிறேன்.

பல இடங்களில் கல்லூரிகள் மற்றும் பள்ளிக்கூடங்களில் மூலிகைத்தோட்டம் மற்றும் கண்காட்சிகள் நடத்தி வருகிறேன். ஒரே இடத்தில் 300 வகையான மூலிகைகளை பார்க்கக் கூடிய வாய்ப்பு இருப்பதால் மாணவர்கள், சித்த வைத்தியர்கள் மற்றும் தாவரவியல் நிபுணர்கள் எங்கள் இல்லத்திற்கு அடிக்கடி வருவதால் மிகுந்த மகிழ்ச்சியுடனும் கவனமாகவும் வளர்த்து வருகிறேன்.

திருமதி. சுபஸ்ரீ
அட்ரி ஹெல்த் புரோடெக்ஸ்
பிளாட் நம்பர் – 7 , திலகர் தெரு
ஏ.ஜீ.எஸ். காலணி
ஆழ்வார் திருநகர்
சென்னை – 27 , செல்– 9677101627

மிளகாய் பயிரில் செவ்வந்திபூ பயிரிட்டு பூச்சி கட்டுப்பாடு

மிளகாய் பயிரில் ஆங்காங்கே செவ்வந்திபூ ஊடு பயிராக சாகுபடி செய்வதால் பூச்சி தாக்குதல் இல்லாமலிருக்கும். செவ்வந்தி பூவை தக்காளியில் ஊடுபயிராக சாகுபடி செய்யும் சமயம் வேரைத்தாக்கும் நூற்புழுக்கள் பாதிப்பு இல்லாமலிருக்கும் . இந்த உத்திகளை குமாரசாமி என்ற ஆந்திர மாநில விவசாயி கடைபிடித்து வருகிறார்.

தகவல் : தேனீ – 292301

மாணவர்களின் புதிய யோசனைகள்

குஜராத்தில் காந்திநகர் அருகே மே 2018 ல் அம்ராபூர் வித்யாபீட் பள்ளியிலுள்ள மாணவர்களுக்கு புதிய யோசனை கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் மாணவர்களை 4 குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவும் பக்கத்து கிராம விவசாயிகள், கைத்தொழில், போன்றவற்றைப்பார்த்து தொழிலுள்ள சிரமங்களுக்கு புதிய கருத்துக்கள், யோசனைகளை படம் மூலம் விளக்க வேண்டும். இதன் மூலம் கீழ்கண்ட சில உத்திகளைப் பகிர்ந்து கொண்டார்கள்.

1) புதிய கரும்புச்சாறு பிழியும் இயந்திரம்

கரும்புச்சாறு பிழியும் சமயம் பிழியப்பட்ட கரும்பு மீண்டும் தானாகவே மறு படி பிழிய படத்தில் காட்டியபடி ரோட்டரி பிளேட் வைக்க வேண்டும்.

2)பயிர்களை காட்டு மிருகங்களின் தொல்லையிலிருந்து காப்பாற்ற

நடமாடும் பயிர் பாதுகாப்பு வளையத்தை உருவாக்கி பிராணிகளின் நடமாட்டம் தெரிந்தால் அசைந்து ஒலி எழுப்பி விரட்டிவிடும்.

நம்வழி வேளாண்மைக்கு சந்தா விவரம்

	வருட சந்தா ரூபாய்	ஆயுள் சந்தா ரூபாய்
நூலகங்கள் / நிறுவனங்கள் / கல்லூரிகள்/ கம்பெனிகள்	200	2000
விவசாயிகள் / தனிநபர்கள்	150	1500
தனிப்பிரதி	30	----
15 வருட பிரதிகளின் தொகுப்பு (பைண்டிங் செய்தது ரூ. 1250)	1500	----

+ (கொரியர் செலவு ரூ. 250)

சந்தா தொகை மணியார்டர் அல்லது பாங்க் டிராப் மூலம் "சேவா"
மதுரை என்ற பெயரில் எடுத்துக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
வங்கியின் பெயர் –யூனியன் பேங்க் ஆப் இந்தியா
மதுரை – கோச்சடைகிளை
SB A/C No – 493902010004241
IFSC Code : UBIN0549398

சேவா
45, டி.பி.எம் நகர், விராட்டிபத்து
மதுரை – 625016
தொலைபேசி : 0452–2380082 , 2380943

நூல் அஞ்சல்

பெறுநர்

Printed by A. Palaniappan at
Vivekananda Press
G-4, Industrial Estate, Madurai - 7

Published and Edited by
P. Vivekanandan on behalf of
SEVA
45. T.P.M. Nagar
Virattipathu
Madurai - 625 016
(0452) 2380 082, 2380943
Email : vivekseva@gmail.com